பக்கங்கள்: 13

# காலைக்கதிர்
Kalaikathir

விழியல் 03 வள்ளுவர் ஆண்டு 2050 ஐப்பசி 05 செவ்வாய்க்கிழமை 22.10.2019 கதிர் 351

### இனிது ரகசியம் அல்ல!

ராஜீவ் காந்தி படுகொலைச் சம்பவம் தொடர்பாக சீமான் தெரிவித்த சில கருத்துக்கள் இப்போது பெரும் சர்ச்சையைத் தோற்றுவித்திருக்கின்றன. அவற்றை வாசிக்கும் போது பழைய நினைவுகள் சில எனக்கு மீண்டன. அவற்றை பக்கம் 02

# கூட்டமைப்பின் எந்த நிபந்தனையையும் நாங்கள் ஒருபோதும் ஏற்கவேமாட்டோம்!

## மஹிந்த ராஜபக்ஷ நேற்றுத் திட்டவட்ட அறிவிப்பு



கொழும்பு, ஒக். 22

ஜனாதிபதி வேட்பாளர்களிடம் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நிபந்தனைகளை முன்வைக்கவுள்ளதாக அறிகிறேன். கூட்டமைப்பின் எந்த நிபந்தனையையும் நாங்கள் ஏற்கமாட்டோம். எமக்கு நாடும் நாட்டின் இறையாண்மையும் முக்கியம். எந்த நிபந்தனையும் இதுவரை எம்மிடம் முன்வைக்கப்படவில்லை. அப்படி முன்வைக்கவேண்டுமென நாங்கள் எதிர்பார்க்கவுமில்லை. ஆனால் நாட்டைப் பேரம் பேசும் எந்தக் கோரிக்கையையும் நாங்கள் ஏற்க தயாரில்லை. அதனை இப்போதே சொல்லி விடுகிறேன்.

– இவ்வாறு நேற்றுத் பக்கம் 13

# ஐந்து தமிழ்க் கட்சிகளும் இந்தியாவின் அடிமைகள்

## கஜேந்திரகுமார் மட்டுமே கொள்கைவாதி இப்படி யாழில் நேற்று அவரே கூறினார்

(எஸ்.நிதர்ஷன்)



யாழ்ப்பாணம், ஒக். 22

பொது ஆவணத்தில் கையொப்பமிட்ட 5 தமிழ்க் கட்சிகளும் இந்தியத் தூதுவரிடம் அனுமதி பெறாமல் மலசலகூடத்தைக்கூடப் பயன்படுத்தமாட்டார்கள். அப்படிப்பட்டவர்கள் எப்படி இதுவரை இந்தியா விரும்பாத – இந்தியா தடை செய்திருந்த – கோட்பாடுகளை ஏற்று, ஒன்றிணைந்து, கையொப்பம் இட்டுள்ளனர் என்பதுதான் இன்றுள்ள கேள்வி. அவர்கள் வெறுமனே தேர்தலுக்காக மட்டும்தான் தாங்களும் கொள்கைவாதிகள் என்று காட்டிக்கொள்வதற்காக அந்த ஆவணத்தில் கையொப்பம் இட்டனர் என நாம் கருத முடியாது. எமது மக்கள் அந்தச் செயலில் உள்ள ஆழத்தை விளங்கிக்கொள்ளவேண்டும். இந்தியா கொடுத்த ஆலோசனையின் அடிப்படையில்தான் அவர்கள் கையொப்பமிட்டுள்ளனர்.

– இவ்வாறு நேற்று அடித்துக் கூறினார் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம்.

பக்கம் 03

## பிரபாகரனை விட சம்பந்தனின் கோரிக்கைகள் பாரதூரமானவை

### பதறுகின்றது மஹிந்த தரப்பு

கொழும்பு, ஒக். 22

விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரனின் கோரிக்கைகளைவிட, பாரதூரமான கோரிக்கைகளையே தமிழ்த் தேசியக் கட்சிகள் முன் பக்கம் 13

## கொடூர சித்திரவதையின் பின் பெண் கழுத்தறுத்துக் கொலை

### கோண்டாவிலில் சம்பவம்



யாழ்ப்பாணம், ஒக். 22

கோண்டாவிலில் தனிமையில் வசித்த வயோதிபப் பெண், சித்திரவதையின் பின் பக்கம் 03

## கட்சித் தாவல்களுக்கு இரகசியப் பேச்சு கோட்டா – சஜித் தரப்புக்கள் மும்முரம்

கொழும்பு, ஒக். 22

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடும் ஸ்ரீ லங்கா பொதுஜனபெரமுனவின் ஜனாதிபதி வேட்பாளர் கோட்டபாய ராஜபக்ஷவுக்கு ஆதரவு தெரிவித்து அவருடன் இணைய ஐக்கிய தேசியக் கட்சியின் முக்கிய அமைச்சர் ஒருவர் தீர்மானித்துள்ளார். பக்கம் 13

## 5 தமிழ்க் கட்சிகள் முன்வைத்துள்ள கோரிக்கைகள் ஏற்கக்கூடியவையே!

### வடக்கு – கிழக்கு இணைப்பை மட்டும் ஏற்கமுடியாது என்கிறார் விஜித ஹேரத்

கொழும்பு, ஒக். 22

ஜனாதிபதித் தேர்தலை அடிப்படையாக வைத்து 5 தமிழ்க் கட்சிகள் முன்வைத்த 13 அம்சக் கோரிக்கைகளில் பலவற்றை ஏற்றுக் பக்கம் 13

## இந்தியத் துணைத் தூதரகத்தை முற்றுகையிட்டுப் போராட்டம்!

### கைதான யாழ். மாவட்ட மீனவர்களை விடுவிக்கக் கோரி நாளை நடத்தப்படும்

(எஸ்.நிதர்ஷன்)

யாழ்ப்பாணம், ஒக். 22

யாழ். மாவட்டக் கடற்பகுதியில் கைதுசெய்யப்பட்ட 18 மீனவர்களை விடுதலைசெய்யக்கோரி யாழ். மாவட்ட மீனவர்களால் பக்கம் 13

## இந்திய இராணுவ நடவடிக்கையில் கொல்லப்பட்ட யாழ். வைத்தியசாலை ஊழியர்களுக்கு அஞ்சலி





யாழ்ப்பாணம், ஒக். 22

யாழ். போதனா வைத்தியசாலைக்குள் புகுந்து இந்தியப் படைகள் அரங்கேற்றிய கொலைவெறித் தாக்குதலில் கொல்லப்பட்ட 21 மருத்துவ சேவையாளர்கள் உள்ளிட்ட 68 அப்பாவிகளின் பக்கம் 13

## பேஸ்புக்கின் ‘உள்பெட்டி’ தகவல்களும் கண்காணிப்பு

### ஜனாதிபதித் தேர்தலை ஒட்டி

கொழும்பு, ஒக். 22

இலங்கையில் முகநூல் பயன்படுத்துநர்களால் உள்பெட்டியில் (inbox) பரிமாறப்படும் தகவல் பக்கம் 13

## சந்திரிகாவுடன் இணைந்து சு.கவைக் கைப்பற்றுவேன்

### குமார வெல்கம எம்.பி. அறிவிப்பு

கொழும்பு, ஒக். 22

முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்கவுடன் இணைந்து பக்கம் 13

## கோழி இறைச்சி, முட்டை இறக்குமதிக்கு அனுமதி

கொழும்பு, ஒக். 22

கோழி இறைச்சி மற்றும் முட்டை என்பவற்றை இறக்குமதி செய்வதற்கு அமைச்சரவையின் வாழ்க் பக்கம் 13

## தேர்தலை உன்னிப்பாக அவதானிக்கும் இந்தியா

புதுடில்லி, ஒக். 22

இலங்கையில் நடக்கவுள்ள ஜனாதிபதித் தேர்தலை இந்தியா உன்னிப்பாக அவ பக்கம் 13

# ஒருவரையேனும் நான் தூக்கில் போட்டு விட்டுப்போகவேண்டும்

## மைத்திரியின் விருப்பம் இதுவாம்

கொழும்பு, ஒக். 22

தனது பதவி காலத்துக்குள்ளேயே நீதிமன்றத்தின் சாதகமான தீர்ப்பு கிடைக்குமானால் போதைப்பொருள் கடத்தல்காரர் ஒருவருக்கேனும் மரண தண்டனையை நிறைவேற்ற எதிர்பார்த்திருக்கிறார் என ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்று முன்தினம் நடைபெற்ற ஐக்கிய நாடுகள் சபையின் தேசிய இளைஞர் முன்மாதிரி மூன்றாவது மாநாட்டில் உரையாற்றிய போதே ஜனாதிபதி இதனைக் கூறினார்.

இளைஞர்களை வலுவூட்டவும் அவர்களுக்குரிய சலுகைகளை வழங்கவும் தனது பதவிக் காலத்தில் பாரிய வேலைத்திட்டங்கள் பலவற்றை முன்னெடுத்தார் எனவும் அவர் கூறியுள்ளார்.

இளைஞர்களைப் பலப்படுத்துவது, அவர்களின் கருத்துக்களை விரிவுப்படுத்தல் மற்றும் ஆயுதங்கள் இல்லாமல் பிரச்சினைகளை எவ்வாறு தீர்ப்பது என்பவை குறித்து தெளிவுப்படுத்தும் நோக்கில் இந்த மாநாடு ஏற்பாடு செய்யப்பட்டிருந்ததுடன் அதில் நாடு முழுவதிலும் இருந்து 400 க்கும் மேற்பட்ட இளைஞர்கள் பங்கேற்றனர்.

இதன்போது கூடியிருந்த இளைஞர், யுவதிகளின் கேள்விகளுக்கும் ஜனாதிபதி பதில் வழங்கியமையுடன், இளைஞர்கள் அரசியலில் பிரவேசிக்க வேண்டுமானால் அவர்கள் கல்வியில் மேம்பட்டிருக்க வேண்டும் எனவும், சிறந்த நற்பெயரை கொண்டவர்களாகவும் காணப்பட வேண்டும் எனவும் சுட்டிக்காட்டினார்.

கல்விமான்கள் உள்ள நாட்டில் பிரச்சினைகள் குறைவதாகவும் நாடு தற்போது வளர்ச்சிக்கான பாதையில் பயணிப்பதாகவும் ஜனாதிபதி தெரிவித்துள்ளார்.

மேலும் போதைப் பொருள் பாவனையில் இருந்து நாட்டு இளைஞர்களை காப்பாற்றக் கடுமையான முயற்சிகளை மேற்கொண்டு கடமையாற்றினார் எனவும் ஜனாதிபதி கூறினார்.

போதைப் பொருள் கடத்தல்காரர்களுக்கு மரண தண்டனை வழங்கத் தான் முயற்சித்த போது அதற்கு எதிராக உயர் நீதிமன்றத்தில் வழக்கு பதிவு செய்யப்பட்டதாகவும், அது குறித்த நீதிமன்ற தீர்ப்புக்கு தலைசாய்ப்பதாகவும் சில வேளைகளில் தனது பதவி காலத்துக்குள்ளேயே சாதகமான தீர்ப்பு கிடைக்குமானால் போதைப் பொருள் கடத்தல்காரர் ஒருவருக்கேனும் மரண தண்டனையை நிறைவேற்றுவதாகவும் அவர் குறிப்பிட்டார்.

# கோட்டா வென்றால் கைதிகள் விடுதலை!

## கூறுகின்றார் டக்ளஸ் எம்.பி.

யாழ்ப்பாணம், ஒக். 22

ஜனாதிபதித் தேர்தலில் கோட்டாபய ராஜபக்ஷ வெற்றி பெற்றால் சிறைகளில் இருக்கும் தமிழ் அரசியல் கைதிகளின் விடுதலையை நிச்சயம் உறுதி செய்வோம் என ஈழ மக்கள் ஜனநாயக கட்சியின் செயலாளர் நாயகம் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்துள்ளார்.

எனினும், இது வெறும் தேர்தல் வாக்குறுதி அல்ல. இது எமது ஆழ்மன விருப்பம் எனவும் அவர் கூறியுள்ளார்.

யாழ்ப்பாணத்தில் உள்ள கட்சியின் தலைமை அலுவலகத்தில் நடைபெற்ற கட்சியின் மாவட்ட, பிரதேச நிர்வாக செயலாளர்கள், வட்டார நிர்வாக செயலாளர்கள், செயற்பாட்டாளர்களுடனான கூட்டத்தில் உரையாற்றுகையிலேயே அவர் இந்த விடயங்களை குறிப்பிட்டுள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினரால் அரசியல் இலாபங்களுக்காக இதுவரை விடுவிக்கப்படாதுள்ள அரசியல் கைதிகள் விடுதலை தொடர்பில் ஒரு நம்பகமின்மைத் தன்மை காணப்படுகின்றது. இதை மாற்றியமைத்து அவர்களதும் அவர்களது குடும்பங்களதும் எதிர்காலம் தொடர்பில் நாம் உறுதியான நம்பிக்கை கொடுக்க வேண்டும். இதை நாம் செய்து முடிக்க அரசியல் அதிகாரங்கள் எமது கரங்களுக்கு வேண்டும்.

அந்தவகையில், முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவால் ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுன கட்சி சார்பில் நிறுத்தப்பட்டுள்ள ஜனாதிபதி வேட்பாளர் கோட்டாபயவின் வெற்றியை நாம் உறுதி செய்ய வேண்டும். அவரது வெற்றியில் எமது மக்களின் பங்களிப்பு இருக்குமானால் அதனூடாக நாம் ஆட்சிக்கு வந்தால் அந்த கைதிகளின் விடுதலையை நிச்சயம் உறுதி செய்வோம் – என்றார்.

# பூந்தோட்டத்தில் போத்தலால் குத்தப்பட்டு இருவர் படுகாயம்

வவுனியா – பூந்தோட்டம் பகுதியில் நேற்று முன்தினம் இரவு மது போதையில் நின்ற இளைஞர்கள் தாக்கியதில், இரண்டு பேர் காயமடைந்து வவுனியா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

மது போதையில் நின்ற சிலர் அவ்வீதியால் பயணித்த இருவரை வழிமறித்து அவர்களுடன் முரண்பட்டமையுடன் போத்தல் ஒன்றால் அவர்களைக் குத்தினர். இதனால் காயமடைந்த நிலையில் 30 மற்றும் 24 வயதான இரு இளைஞர்கள் வவுனியா வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

பூந்தோட்டம் சந்தியில் ஒன்று கூடும் சில இளைஞர்கள் அவ்வீதி வழியாகப் பயணிக்கும் பொதுமக்களிடம் ரகளையில் ஈடுபடுவதும் சேட்டை புரிவதுமான செயற்பாடுகள் அண்மைக் காலமாக அதிகரித்து காணப்படுவதுடன், ஒவ்வொரு நாளும் இப்பகுதியில் அடிதடி சம்பவங்கள் இடம்பெற்று வருகின்றன என கிராம வாசிகள் விசனம் தெரிவிக்கின்றனர்.

# தமிழகத்தில் இருந்து திரும்பிய 5 பேர் கைது!

கடல் வழியாக சட்டவிரோதமான முறையில் தமிழகத்தில் இருந்து நாட்டுக்குள் பிரவேசிக்க முற்பட்ட ஐந்து பேர் நேற்று முன்தினம் தலைமன்னார் பகுதியில் கைது செய்யப்பட்டுள்ளனர் என கடற்படை அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். 29, 30, 34, 37 மற்றும் 49 வயதான நபர்களே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளனர். இவர்கள் பேசாலை, யாழ்ப்பாணம், தலைமன்னார் ஆகிய இடங்களைச் சேர்ந்தவர்கள் எனத் தெரிவிக்கப்படுகின்றது. சம்பவம் தொடர்பில் தலைமன்னார் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

## இனி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இந்தச் சந்தர்ப்பத்தில் வாசகர்களுடன் பகிர்ந்து கொள்வது பொருத்தமானது எனக் கருதுகிறேன்.

இது நடந்தது 2006 ஒக்டோபரில். மஹிந்த அரசுக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையிலான சமாதானம் குழம்பி மோதல் வெடித்து ஒரு மாதம் கூட ஆகியிருக்கவில்லை. அந்த சமயத்தில்தான் இது நடந்தது.

அப்போது நான் கொழும்பிலிருந்தும் யாழ்ப்பாணத்திலிருந்தும் வெளிவரும் இரண்டு வெவ்வேறு தமிழ்த் தினசரிகளுக்கு ஒரே சமயத்தில் ஆசிரியராக இருந்தேன்.

தலைநகரிலிருந்தபடி தமிழ்ப் போராளிகளுக்கு ஆதாரவான தீவிர நிலைப்பாட்டை நாம் எடுத்தமையினால் கொழும்பினால் எதிரி போல நாங்கள் பார்க்கப்பட்ட காலம் அது.

இந்தியத் தூதரகத்துடன் தொடர்புடைய ஒருவர் என்னுடன் தொலைபேசியில் பேசினார்.

இந்தியாவை – குறிப்பாக டில்லியை – தளமாகக் கொண்டு இயங்கும் பிரபல ஊடகங்களின் ஆசிரிய பீடங்களில் உயர்மட்டத்தில் பணியாற்றும் ஓர் இருபத்தியைந்து பெண் ஊடகவியலாளர்கள் கொழும்பு வந்திருக்கின்றனர் என்றார்.

அது குறித்து நான் அறிந்திருந்தேன் எனப் பதிலளித்தேன்.

*"அவர்கள் தென்னிலங்கையில் பலரையும் சந்தித்து விட்டார்கள். பெரும்பலும் இராணுவ அதிகாரிகள், அரசியல் தலைவர்களை எல்லாம் பார்த்துவிட்டனர். ஆனால் எல்லோரும் இலங்கை அரசு அல்லது கொழும்புப் பக்கத்தினர். மற்றப் பக்கத்திலும் – தமிழர் பக்கத்திலும் – யாரையேனும் சந்திக்க விரும்புகின்றார்கள்...!"* – என்று இழுத்தார் அவர்.

*''புலிகளின் பக்கத்திலா? கொழும்பில் அவர்கள் யாரும் இல்லையே...! வன்னிக்கு அல்லவா நீங்கள் இவர்களை அழைத்துச் செல்ல வேண்டும்? இங்கு எனக்குத் தெரிய புலிகள் தரப்பில் யாரும் இல்லையே...!"* – என்றேன் நான்.

*"ஏன் இல்லை...? நீங்கள் இருக்கின்றீர்கள்...?"* – என்று என் தலையில் புலித் தொப்பியைச் சூட்டினார் அவர்.

நான் சிரித்தேன்.

*"இதற்கெல்லாம் அசருகின்றவன் அல்லன் நான். நாங்கள் நடு நிலைப்பத்திரிகையாளர்கள். தமிழர் தரப்பின் – எங்கள் மக்களின் – நிலைப்பாட்டை உறுதியோடு எடுத்துச் செல்லும் ஊடகவியலாளர்கள். அதற்கு நீங்கள் 'புலிப்பட்டம்' சூட்டினால் அதற்கு நாம் பாத்திரவாளியல்லர்..."* – என்றேன்.

அந்த ஊடக அம்மணிகளை சந்திக்க நான் தயங்கவில்லை. எங்கள் பத்திரிகைகளின் நிர்வாக இயங்குநரின் கொழும்பில் இல்லத்தில் சந்திப்பு.

இரண்டு டசினுக்கு மேற்பட்ட ஊடக அம்மணிகள் வந்திருந்தனர். மாறி மாறி என் மீது கேள்விக் கணைகள் பாய்ந்தன.

வழக்கமாக ஊடகச் சந்திப்புகளில் நாங்கள்தான் கேள்விகள் கேட்டு குழப்புவோம். அன்று மாறி நடந்தது.

புலிகள் இழைத்தவை என்று கூறப்படும் ஒவ்வொரு தவறையும் குறிப்பிட்டு அவை தொடர்பில் என் வாயைக் கிளறத் தொடங்கினார்கள். பெரும்பாலும் ராஜீவ் காந்தி படுகொலை தொடர்பான விடயம்தான் பிய்த்து உதறப்பட்டது.

நான் களைத்துப் போனேன். அவர்கள் ஹிந்தியிலும், ஆங்கிலத்திலும் எழுப்பும் கேள்விகளுக்கு நான் ஆங்கிலத்தில் பதிலளிக்க வேண்டியிருந்தது.

ஒரு கட்டத்தில் நானும் சீறத் தொடங்கினேன்.

*"சரி... உங்களைப் போல நானும் ஒரு சிரேஷ்ட பத்தரிகையாளர்தானே...! இவ்வளவு நேரமும் நீங்கள் என்னிடம் கேள்வி கேட்டீர்கள். இனி நான் உங்களிடம் சில கேள்விகளைக் கேட்கலாமா?"* – என்றேன் நான். அதிருப்தியுடன் சரி என்று தலையசைத்தார்கள். நான் எனது 'சமா'வை ஆரம்பித்தேன்.

*"இலங்கையில் யாருக்கும் யாருக்கும் பிரச்சினை?"* – இது என் கேள்வி.

*"சிங்களவர்களுக்கும் தமிழர்களுக்கும்...!"* – இது அவர்கள் பதில்.

*"நல்லது. இந்தப் பிரச்சினைக்கு சுமுகத் தீர்வு காண வேண்டுமானால் பேசவேண்டியவர்கள் யார்?"*

*''தமிழர்களும் சிங்களவர்களும்!"*

*"சரியான பதில். தீர்வுக்கான உடன்பாட்டுக்கு இணங்க வேண்டியவர்கள் யார்?'* – இது எனது அடுத்த கேள்வி.

*''தமிழர்களும் சிங்களவர்களும்...!"*

*"மிகச் சரி. இணக்க உடன்பாடு ஏற்பட்டால் அதில் ஒப்பமிட வேண்டியவர்கள் யார்...?"* – எனது இந்தக் கேள்வி அவர்களை ஒரு நிமிடம் அசர வைத்தது. பதிலளிக்காமல் அவர்கள் மென்று விழுங்கனர். நான் முழங்கத் தொடங்கினேன்.

*"இலங்கைத் தமிழர்களின் பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்கு ஜே.ஆர்.ஜெயவர்த்தனா என்ற சிங்களத் தலைவரோடு பேச்சு நடத்தியவர் ராஜீவ் காந்தி. இலங்கைத் தமிழர்களின் தேசிய இனப் பிரச்சினைக்குத் தீர்வு என்ற பெயரில் கொண்டு வரப்பட்ட ஒப்பந்தத்தில் ஜே.ஆரோடு ஒப்பமிட்டவரும் அவரே. உண்மையில் தமிழர்களுக்கும், சிங்களவர்களுக்கும் இடையிலான பிணக்குக்குத் தீர்வாகக் கொண்டுவரப்படும் ஓர் ஒப்பந்தத்தில் தமிழர்களினதும், சிங்களவர்களினதும் தலைவர்கள் ஒப்பமிட, அதன் கீழ் உறுதிப்படுத்தி இந்தியப் பிரதமர் ஒப்பமிடுவது வேறு. அவரே நேரடியாக ஒரு தரப்பாக ஒப்பமிடுவது வேறு. எங்கள் உரிமைக்காக நாங்கள் போராடுகிறோம். நாங்கள் சாகின்றோம். எங்களைக் கேட்காமல் எங்களுக்காக – எங்கள் தமிழ்த் தலைவர்களின் இடத்தில் தம்மை வைத்துக் கொண்டு – அவர் ஒப்பமிடுகின்றார். அதாவது இலங்கைத் தமிழர்கள் சார்பில் ஒப்பமிடுவதற்கு அந்தத் தமிழர்களின் ஆணைபெற்றவராகத் தம்மை நினைத்து – கருதி – அவர் ஒப்பமிட்டார். (He thought that he has the mandate to sign on behalf of the Tamils)"* – என்று ஒரே மூச்சில் நான் கூறிமுடித்தேன்.

*"சரி... அவரைப் புலிகளே – தமிழர்களே – கொன்றனர் என வைத்துக் கொள்வோம். எங்கள் சார்பில், எங்களுக்காக ஒப்பமிட்ட எங்கள் பிரதிநிதி, தவறிழைத்தார் எனக் கருதி நாங்கள் அந்தத் தண்டனையை விதித்தோம் என்பதுதான் அர்த்தம். எங்களுக்கான உடன்பாட்டில் எங்களுக்காக அவர் ஒப்பமிடும்போது அவர் எங்கள் பிரதிநிதி; எங்களில் ஒருவர். அதற்காக கொல்லப்படும் போது மட்டும் அவர் எப்படி உங்கள் பிரதமராகிவிடுவார்?"* – என்று கேட்டேன் நான்.

அம்மணிகள் மத்தியில் சலசலப்பும் முணுமுணுப்பும் எழுந்தனவே தவிர பதில் வரவில்லை.

இந்தப் பேட்டியின் முழு விவரத்தை நீங்கள் இன்றும் பார்வையிடலாம். Google Search இற்குப் போய் Rediff.com இணையத்தில் 2006 ஒக்ரோபர் 17 இல் 'India will have to recognize LTTE' என்ற தலைப்பில் அந்த நீண்ட பேட்டி பிரசுரமகியிருப்பதை நீங்கள் பார்க்கலாம்.

அதுவல்ல விடயம். அதற்கு அடுத்த நாள் ஒரு சம்பவம் நடத்தது.

மதியம் போல ஒரு தொலைபேசி அழைப்பு வந்தது. லண்டனிலிருந்து மதியுரைஞர் அன்டன் பாலசிங்கம் எடுத்திருந்தார்.

*"டேய்... தம்பி... பேட்டி வாசிச்சன்... ராஜீவ் சம்பவம் தொடர்பாக புது வாதம் ஒன்றை அவிழ்த்து விட்டிருக்கிறாய்... ஒரு வித்தியாசமான பார்வை... பாராட்டுக்கள்... உதை நீ... பத்திரிகைக்காரன் சொல்லலாம்... புலிகள் (இயக்கம்) உதை ஒரு வாதமாகச் சொல்ல முடியாது...!"* – என்று குறிப்பிட்டு என் கருத்தை மெச்சினார்.

ஆனால் அந்தப் பாராட்டை சந்தோஷமாகக் குறிப்பிட்ட பாலா அண்ணன், அடுத்த ஓரிரு நாள்களில் மிகத் துயரச் செய்தியை என்னுடன் பரிமாறுவதற்காகத் தொடர்பு கொண்டார்.

அது, அவரது மார்பும் வயிற்றுப் புறமும் புற்று நோயால் முற்றாகப் பாதிக்கப்பட்டு விட்டன என்று குறிப்பிட்டு, அதனால் அவருக்கு இனி எஞ்சியுள்ள வாழ்க்கைக் காலம் இன்னும் ஆறு முதல் எட்டு வாரங்கள்தாம் என மருத்துவர்கள் காலக்கெடு விதித்தமை பற்றிய செய்திப் பரிமாறல்தான்.

அந்தச் செய்தி கிடைத்ததும் நான் தாமதிக்காமல் லண்டன் விரைந்தேன்.

அடுத்த ஐந்து வாரமும் அவருடன் அவரது லண்டன் நியூ மோடன் இல்லத்தில் அவர் அருகிலிருந்து பேசிப் பழகி, ஊடாடி, உரையாடி அவரது அனுபவப் பகிர்வை – பட்டறிவை – மணித்தியாலக் கணக்கில் செவிமடுக்கும் வரலாற்றுப் பெருவாய்ப்பு – பெரும் பாக்கியம் – எனக்குக் கிடைத்தது.

'ரெடிவ்.கொம்' உட்பட பல இந்திய ஊடகங்களில் ராஜீவ் காந்தி கொலை தொடர்பான எனது பார்வை பற்றிய விடயம் பிரசுரமாகி – அல்லது ஒளிபரப்பாகி – இரண்டு மாதங்களாவதற்குள் பாலா அண்ணன் எங்களை விட்டுப் பிரிந்துவிட்டார்...!

**- மின்னல் -**

## ஐந்து தமிழ்க்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கொக்குவிலுள்ள அவரது கட்சியின் தலைமை அலுவலகத்தில் நேற்று நடத்திய ஊடக சந்திப்பின்போதே அவர் இவ்வாறு கூறினார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில் –

ஜனாதிபதித் தேர்தல் சம்பந்தமாக தமிழ்க் கட்சிகள் ஒருமித்த நிலைப்பாட்டை எடுக்கவேண்டுமென்ற அடிப்படையில் 6 கட்சிகளுக்கிடையே பேச்சுக்கள் நடந்தன. அதில் ஐந்து கட்சிகள் ஒன்றிணைந்து ஒரு பொது அறிக்கையைத் தயாரித்து பொது ஆவணமாக வெளியிட்டுள்ளனர். ஆனால் அந்த அறிக்கையில் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியாக நாங்கள் முன்வைத்த கோரிக்கைகளும் அதன் இறுதி வடிவத்தில் வந்த விடயங்களும் எங்களின் முயற்சியால் வந்தது என்பதும் உங்கள் அனைவருக்கும் தெரியும்.

அப்படியிருந்தும் எங்கள் அமைப்பு அந்த அறிக்கையில் கையொப்பம் வைக்க முடியாத நிலைமை உருவாகுவதற்கான காரணங்களும் இருந்தன. இது தொடர்பில் நாங்கள் ஏற்கனவே மக்களுக்குத் வெளிப்படுத்தியும் இருக்கின்றோம். குறிப்பாக ஐந்து கட்சிகள் கைச்சாத்திட்ட அறிக்கை கொள்கையளவில் வெளியிடப்பட்ட கருத்துக்களாக இருக்கின்றனவே தவிர நடைமுறையில் அவர்கள் பிழையான பாதையில் போவதைக் காணக்கூடியதாக உள்ளது.

ஆகவே தவறான பாதையில் போவதைத் தடுக்கக்கூடிய வகையிலும் இந்தக் கொள்கைக்கு அதாவது அவர்களே கைச்சாத்திட்ட 13 அம்சக் கோட்பாடுகளுக்கு நேர்மாறாக இருக்கக் கூடிய புதிய அரசமைப்புக்கான இடைக்கால அறிக்கையை நிராகரிக்கவேண்டுமென்று நாங்கள் கேட்டபோதும் அதனை அவர்கள் மறுத்து எங்களை அந்தக் கூட்டத்திலிருந்து வெளியேற்றும் கோணத்தில் நடந்துகொண்டார்கள். அதனால் அந்த உடன்பாட்டில் நாங்கள் கையொப்பத்தை இடமுடியாத நிலைமை ஏற்பட்டது.

இவ்வாறான நிலைமையில் இன்று பலரும் கேட்கும் கேள்வி என்னவென்றால், இந்த ஐந்து கட்சிகளும் எப்படி இந்த கோரிக்கைகளில் இணங்கினார்கள் என்பது தான்.

ஏனெனில்கடந்தஎத்தனையோ வருடங்களாக – போர் முடிந்த நாளில் இருந்து எந்தெந்த அடிப்படைக் கொள்கைகளை நிராகரித்து வந்தார்களோ அதற்கு மாறான ஒரு நிலைப்பாட்டை ஏற்று இணங்கியிருக்கின்றார்கள் என்பதால்தான்.

குறிப்பாக தேசம் என்ற கோட்பாட்டை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நிராகரித்தது மட்டுமல்ல அதை நக்கலடித்து நையாண்டி பண்ணியதாகத்தான் அவர்களது செயற்பாடுகளும் இருந்தன. தமிழர்களின் தனித்துவமான இறைமை என்ற நிலைப்பாட்டைக் கூட்டமைப்பு அடியோடு நிராகரித்தது. இனப்படுகொலை என்ற தீர்மானத்தை அவர்கள் அடியோடு நிராகரித்தார்கள். சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்துக்கு இலங்கையைக் கொண்டு செல்வதனூடாக மட்டும்தான் தமிழ் மக்களுக்கு நீதி கிடைக்குமென்ற கோட்பாட்டை நக்கலடித்து நிராகரித்தார்கள்.

கொள்கைஎன்றவிடயங்களில் தேசம் என்ற கோட்பாட்டையும் தமிழர்களுக்குத் தனித்துவமான இறைமை உள்ளது என்ற கோட்பாட்டையும் நிராகரித்து வந்தார்கள்.

ஆனாலும் இதனைச் செய்தது கூட்டமைப்பில் அங்கம் வகிக்கின்ற அந்த மூன்று கட்சிகள் மட்டுமல்ல என்பதிலும் மிகத் தெளிவாக இருக்கவேண்டும். கூட்டமைப்பில் இருந்த வெளியேறி ஏதோ தங்களைக் கொள்கைவாதிகளாகக் காட்ட விரும்பிய அல்லது முயற்சித்த விக்கினேஸ்வரனின் கட்சி, அதேபோன்று சுரேஷ் பிரேமச்சந்திரனின் ஈ.பீ.ஆர்.எல்.எவ். ஆகியவையும்தான்.

தமிழ் மக்கள் பேரவையின் தீர்வுத் திட்டம் வெளிவரும் நிலையில் அதற்கு மாற்றீடாக இந்தக் கொள்கைகளைக் கைவிட்டு மாகாண சபையில் ஒரு தீர்வுத் திட்டத்தைத் தயாரித்து அந்தத் தீர்வுத் திட்டத்தை அதாவது தமிழர்கள் ஒரு தனித்துவமான தேசம், எங்களுக்கு ஒரு இறைமை இருக்கிறது என்ற கோட்பாடுகளைக் கைவிட்டுத் தயாரிக்கப்பட்ட மாகாண சபையின் தீர்வு யோசனைகளையே அரசிடம் தன் கைகளாலேயே விக்கினேஸ்வரன் கையளித்திருந்தார்.

ஆகவே இங்கு இப்போது நடந்தது என்னவென்று பார்த்தால், இதுவரை தமிழர்களின் அடிப்படைக் கோட்பாடுகளை நிராகரித்து வந்த தரப்புக்கள் திடீரென எழும்பித் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி 2009 ஆம் ஆண்டிலிருந்து எக்காரணம் கொண்டும் கைவிடக்கூடாது என்று சொன்ன இந்தக் கோட்பாடுகளை ஏற்று ஒரு ஆவணத்தைத் தயாரித்து அதில் தங்கள் கையொப்பத்தை இட்டிருக்கின்றார்கள்.

எனவே இந்த விசித்திரமான சம்பவங்கள் எப்படி இடம்பெற்றிருக்கின்றன என்பதைத் தான் தெளிவாகப் பார்க்க வேண்டும்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு உட்பட அந்த ஐந்து கட்சிகளும் இதுவரைதமிழர்களின் அடிப்படைக் கோட்பாட்டை நிராகரித்து வந்த தரப்புக்கள் தான். குறிப்பாக இந்தியா விரும்பாத எதையுமே தாங்களும் செய்யத் தயாரில்லாத இந்தத் தரப்புக்கள் கடந்த திங்கட்கிழமை தமிழர்களின் அடிப்படைக் கோட்பாடுகளை ஏற்று அதனை வெளிப்படுத்தியிருக்கின்றார்கள் என்றால் அல்லது கொள்கையளவில் ஒரு ஆவணத்தில் தங்கள் கையொப்பத்தை இட்டிருக்கின்றார்கள் என்றால் அந்தச் செய்தி வெளியில் வர வேண்டுமென்பதற்காக இந்தியா திட்டமிட்டு அவர்களுக்கு கொடுத்த ஆலோசனையின் அடிப்படையில் தான்.

ஏனெனில் வரப்போகும் ஜனாதிபதித் தேர்தல் வெறுமனே சஜித் பிரேமதாஸ மற்றும் கோட்டாபய ராஜபக்ஷவுக்கு இடையில் நடக்கும் தேர்தல் அல்ல என்பதை நாங்கள் மிகத் தெளிவாக பல தடவைகள் கூறியிருக்கின்றோம்.

இந்த நாட்டில் நடைபெறும் தேர்தல் போட்டித் தன்மை என்பது வெறுமனே இந்த நாட்டில் உள்ள கட்சிகளுக்கிடையே நடக்கும் போட்டித் தன்மை அல்ல. மாறாக ஒவ்வொரு கட்சிக்குப் பின்னால் இருக்கக் கூடிய சர்வதேச வல்லரசுகளின் போட்டி தான் நடக்கிறது.

இந்தத் தேர்தலும் ஒரு பக்கம் சீனாவும் சீனா சார்ந்த நாடுகளுகளும் இணைந்து கோட்டாபய ராஜபக்ஷவின் பின்னால் உள்ள தரப்புக்களாகவும் அதேபோன்று இந்தியா மற்றும் மேற்கு நாடுகள் சஜித்பிரேமதாஸவுக்குப்பின்னால் இருக்கக்கூடிய தரப்புக்களாகவும் உள்ளன. இதுதான் இங்கு உண்மையில் நடக்கின்ற சர்வதேசப் போட்டி.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு உட்பட அந்த ஐந்து கட்சிகளும் இந்தியாவின் முகவர்கள் என்பது உங்கள் அனைவருக்கும் நன்றாகத் தெரியும். அவர்கள் அந்த அறிக்கையை வெளியிடுவதன் ஊடாக மிகத் தெளிவாக சீனா சார்ந்த கோட்டபாய ராஜபக்ஷவுக்கு ஒரு செய்தியை அவர்கள் வெளியிட்டிருக்கின்றார்கள்.

அதாவது இந்தியாவினதும் மேற்குநாடுகளினதும்நலன்களை மீறி செயற்படுவதாக இருந்தால் இதுவரை தமிழ்த் தேசிய அரசியலை தமிழ் மக்களிடமிருந்து இல்லாமல் செய்வதற்குக் கூட்டமைப்பு ஊடாகச் செயற்பட்ட நாங்கள் மீண்டும் தமிழ் மக்களின் அடிப்படை அபிலாஷைகளை வலியுறுத்துவதற்கும் அவர்களுக்குஅதற்கானஇடத்தைக் கொடுக்கப் போவது மட்டுமல்லாமல் அதற்கு முழுமையான ஆதரவை வழங்கி ஆதரிக்கவும் தயாராக இருக்கிறோம் என்ற செய்தியைத்தான் கோட்டாபயவுக்கு இந்தியா, மேற்கு நாடுகள் தங்களது ஐந்து முகவர் அமைப்புக்கள் ஊடாக வெளிப்படுத்தியிருக்கின்றார்கள்.

அதே நேரம் இன்னொரு செய்தியையும் கோட்டாபய ராஜபக்ஷவுக்கும் அவர் சார்ந்த தரப்புகளுக்கும் அவர்கள் வெளிப்படுத்தியுள்ளனர். தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியினராகிய நாம் ஒற்றையாட்சிக்குரிய இடைக்கால அறிக்கை நிராகரிக்கப்படவேண்டும் என்கின்ற கோட்பாட்டை முன்வைத்து மிக இறுக்கமாக அங்கு வாதாடினோம். ஏனென்றால் உண்மையில் பொது ஆவணத்தில் முன்வைக்கப்பட்ட அந்தக் கோட்பாடுகளை இந்தத் தரப்புக்கள் ஏற்றுக் கொள்ளத் தயார் என்றால் அந்த ஒற்றையாட்சி இடைக்கால அறிக்கையை நிராகரிப்பதில் அவர்களுக்கு எந்தவிதமான பிரச்சினைகளும் இருக்க முடியாது என்பதால் தான்.

ஆனால் கடந்த நான்கு வருடமாகக் கூட்டமைப்பு அந்த இடைக்கால அறிக்கையைத் தயாரித்த நிலையில் இப்போது அதனை நிராகரிப்பதாகச் சொன்னால் அவர்களுக்கு அது வெட்கமாக இருக்குமென்று ஒரு சிலர் இப்போது சொல்லப் பார்க்கின்றனர். ஆனால் அப்படியில்லை. அந்த ஆவணத்திலுள்ள இந்தக் கோட்பாடுகள் அனைத்தையும் அவர்கள் நிராகரித்துத்தான் வந்தார்கள். அதற்குக் கையொப்பம் இடலாமெனில் ஒற்றையாட்சி இடைக்கால அறிக்கையை நிராகரிக்கிறோம் என்று சொல்வதற்கு கையொப்பம் இட இயலாது என்று சொல்ல முடியாது.

இதில் வெட்கப்படுவதற்கு ஒன்றுமில்லை. ஏனெனில் அந்த ஆவணத்திலுள்ளவிடயங்களுக்கு நீங்கள் கையொப்பம் இட்டதே உங்களுக்கு வெட்கமாக இருக்க வேண்டும். ஆனாலும் அவர்கள் அந்த இடைக்கால அறிக்கையை நிராகரிக்காமல் இருப்பதற்கு காரணமும் இருக்கின்றது. அதாவது அவ்வாறு நிராகரிக்காமல் கோட்டாபயவுக்கும் அவர்கள் சார்ந்தவர்களுக்கும் இரண்டாவது செய்தியைக் கொடுக்கின்றார்கள். அது என்னவென்றால் சீனாவைக் கைவிட்டு இந்திய – மேற்கு ஆதிக்க வட்டத்துக்குள் நீங்கள் நிற்பீர்களாக இருந்தால் – உறுதியாக இருப்பீர்களாக இருந்தால் தமிழ் அரசியலை ஒற்றையாட்சிக்குள் முடக்குவதற்கு நாங்கள் தயாராக இருக்கிறோம் என்ற செய்தியைத் தான் அவர்கள் கொடுத்திருக்கின்றார்கள். இது தான் இன்றைக்கு இருக்கக் கூடிய யதார்த்தம்.

ஆகக் கூட்டமைப்பும், விக்கினேஸ்வரனின் கட்சியும், சுரேஷ் பிரேமச்சந்திரனின் ஈ.பி.ஆர்.எல்.எவ். அமைப்பும் சேர்ந்த ஐந்து கட்சிகள் இந்திய – மேற்கு நாடுகளின் முகவர் அமைப்புக்கள் தான் என்பதை மீண்டும் மீண்டும் நிரூபித்திருக்கின்றன. அத்துடன் தமிழ் மக்களின் நலன் கருதி இன்றைக்குக்கூட அவர்கள் செயற்படத் தயாரில்லை.

ஆகையால்தான் இந்த விடயங்கள் தொடர்பில் நாங்கள் மீண்டும் மீண்டும் மக்களுக்குத் தெளிவுபடுத்த விரும்புகின்றோம். இந்தத் தேர்தலில் போட்டியிடும் தரப்புக்களில் குறிப்பாக வெல்லக்கூடியவர்கள் சஜித் பிரேமதாஸ அல்லது கோட்டாபய ராஜபக்ஷதான். இதில் கோட்டாபய என்பவர் தமிழ் மக்களைப் பொறுத்தவரை மிகவும் கொடூரமான நபர் என்பதில் மாற்றுக் கருத்து இருக்க முடியாது. அதில் எந்தவிதமான சந்தேகமும் இருக்க முடியாது.

அதே நேரம் சஜித் பிரேமதாஸ தரப்பும் அதே அளவுக்கு மோசமான செயற்பாட்டில் இறங்குவார்கள் என்பதையும் எங்கள் மக்கள் விளங்கிக் கொள்ள வேண்டும். ஏனெனில் இந்தப் போரை நடத்தி இனப்படுகொலை செய்தது கோட்டாபயவும் சரத் பொன்சேகாவும் இணைந்துதான். வரப்போகும் சஜித் பிரேமதாஸ ஆட்சியில் சரத் பொன்சேகா பாதுகாப்புக்குப் பொறுப்பாக இருப்பார் என்ற விடயத்தை மிகத் தெளிவாகப் பிரகடனப்படுத்தியிருக்கின்றார்கள்.

இந்தியாவின் முகவர் அமைப்புக்களான இந்த ஐந்து கட்சிகளும் 13 கோரிக்கைகளை முன்வைத்து தாங்கள் கையொப்பம் இட்டாலும் கூட – அந்தக் கோரிக்கைகளை வைத்துத் தாங்கள் பேரம் பேசுவதாக மக்களுக்குச் சொன்னாலும் கூட அவர்கள் தொடர்ந்தும் ஐக்கிய தேசியக் கட்சிக்கு வேலை செய்து கொண்டிருக்கின்றனர் என்ற யதார்த்தம் தெரிந்திருக்க வேண்டிய விடயம்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும் ஏனைய இரண்டு கட்சியும் ஐக்கிய தேசியக் கட்சி சார்ந்த செயற்பாடுகளை எப்போதே தொடங்கி விட்டன. இன்று தமிழ் மக்களின் அடிப்படைக் கோட்பாடுகளை நிராகரித்திருந்தும் கூட ஐக்கிய தேசியக் கட்சியின் வேட்பாளருக்கு அந்த வாக்குகளை எடுத்துக் கொடுப்பதற்கான முழு முயற்சியும் நடந்து கொண்டு இருக்கின்றது. இதுதான் இன்றைய யதார்த்தம்.

ஐக்கிய தேசியக் கட்சியைப் பொறுத்தவரை சஜித் பிரேமதாஸ ஒரு கடும் சிங்கள தேசியவாதி. அவருக்கும் கோட்டாபயவுக்கும் இடையே எந்தவிதமான இடைவெளியும் கிடையாது. கோட்டாபயவுக்கு தமிழ் மக்கள் ஒரு போதிலும் வாக்களிக்க மாட்டார்கள். கோட்டாபயவைத் தோற்கடிப்பது தான் ஒரே குறிக்கோளாக இருக்குமென்ற நம்பிக்கையில் சஜித் இருக்கலாம். அத்தோடு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு போன்ற தரப்புக்கள் தமிழ் மக்களின் வாக்குகளை எப்படி என்றாலும் தனக்குப் பெற்றுக் கொடுப்பார்கள் என்ற நம்பிக்கையிலும் அவரது செயற்பாடுகள் அமையலாம். ஆனால் சிங்கள – பௌத்த தேசிய வாதத்தில் ஊறியிருக்கும் மக்களின் பெரும்பான்மையான ஆதரவைப் பெறுவது தான் அவருடைய குறிக்கோளாக இருக்கும்.

அவர் ஆட்சிக்கு வந்தாலும் கூட இனிமேல் தமிழ், முஸ்லிம் மக்களின் வாக்குகளில் ஆட்சி பெறும் நிலைமை ஐக்கிய தேசியக் கட்சிக்கு இருக்கக்கூடாது. பெரும்பான்மை சிங்களக் மக்களின் வாக்குகளிலேயே தான் வெல்லவேண்டுமென்ற நிலைமையை உருவாக்கவேண்டுமென்பதற்காகவும் அதனூடாக அவர் வென்றாலும் கூட சிங்கள பௌத்த தேசியவாதிகளின் நம்பிக்கையை முற்று முழுதாகத் தன் பக்கம் திருப்புவதற்காகத் தான் செயற்படுவார்.

ஆகையினால் தான் இந்த வேட்பாளர்களுக்கிடையேயும் எந்தவொரு இடைவெளியும் கிடையாது என்பதில் நாங்கள் மிகத் தெளிவாக இருக்க வேண்டும். ஆகவே சிங்கள – பௌத்த இனவாதத்தை உச்சரித்து யார் கூட இனவாதியாகத் தன்னைக் காட்டி சிங்கள மக்களுடைய கூடுதலான வாக்குகளைப் பெறலாமென்றநினைக்கின்ற இன்றைக்கு இருக்கக் கூடிய அந்தப் போக்கில் ஒரு உடைவை ஏற்படுத்தியே ஆகவேண்டும்.

எந்தவொரு வேட்பாளரும் வெல்வதற்கு தமிழ் மக்களின் அல்லது முஸ்லீம் மக்களின் வாக்குகளைப் பெற்றுத்தான் வெல்லக் கூடிய நிலைமை நிச்சயமாக இன்று இருக்கிறது. அப்படிப்பட்ட நிலைமையில் தமிழ், முஸ்லீம் மக்கள் விரும்பிய வகையில் அவர்களது கோட்பாடுகள் ஏற்றுக் கொள்ளப்படுகிற கலாசாரத்தை நாங்கள் உருவாக்கியே ஆக வேண்டும் – என்றார். (ஐ–07)

## கொடூர...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கொடூரமாகக் கழுத்தறுக்கப்பட்டுக் கொலை செய்யப்பட்டுள்ளார் என்று நீதி விசாரணையின் போது, தெரியவந்துள்ளது.

கொடூர குணமுடைய ஒருவனே பெண்ணைக் கொலைசெய்துள்ளான். அவன் பெண்ணை இழுத்து வந்து உடையை அகற்றி வயிற்றுப் பகுதியில் நெருப்புத் தணல் உடைய கட்டையால் சூடு வைத்து பெரும் சித்திரவதை செய்துள்ளான் என்று நீதி விசாரணைகளில் தெரியவந்தது.

வயோதிபப் பெண் அணிந்திருந்த சங்கிலி மற்றும் காப்புகள் என்பனவும் கொலைகாரன் அபகரித்துச் சென்றுள்ளான் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

கோண்டாவில் நெட்டிலிப்பாய் பிள்ளையார் கோவிலுக்கு அருகாமையில் தனிமையில் வசித்த வயோதிபப் பெண் ஒருவர் கூரிய ஆயுதத்தினால் கழுத்து வெட்டப்பட்ட நிலையில் நேற்றுக் காலை சடலமாக மீட்கப்பட்டார்.

அதே இடத்தைச் சேர்ந்த 2 பிள்ளைகளின் தாயாரான புண்ணியானந்தம் சந்திராதேவி (வயது – 61) என்ற வயோதிபப் பெண்ணே வெட்டுக் காயங்களுடன் வீட்டு முற்றத்திலிருந்து சடலமாக மீட்கப்பட்டார்.

பிள்ளைகளில் ஒருவர் வெளிநாட்டில் உள்ளமையுடன் மற்றையவர் ஆசிரியர் என்றும் நீர்வேலியில் வசித்து வருகின்றார் என்றும் பொலிஸார் தெரிவித்தனர்.

வயோதிபப் பெண் சடலமாக மீட்கப்பட்ட இடத்தில் இருந்து கூரிய ஆயுதத்தையும் யாழ்ப்பாணம் தடயவியல் பொலிஸார் மீட்டனர்.

இக்கொலை சம்பவம் தொடர்பாகக் கோப்பாய் பொலிஸார் தீவிர விசாரணைகளை முன்னெடுத்தனர்.

சம்பவ இடத்துக்குச் சென்ற யாழ்ப்பாணம் நீதிவான் அ.பீற்றர் போல், சட்ட மருத்துவ நிபுணர் உ.மயூரதன் ஆகியோர் நீதி விசாரணைகளை முன்னெடுத்தனர்.

அதனையடுத்து உடற்கூற்றுப் பரிசோதனைக்காக பெண்ணின் சடலத்தை யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் ஒப்படைக்க யாழ்ப்பாணம் நீதிவான் உத்தரவிட்டார்.

உடற்கூற்றுப் பரிசோதனையின் பின் சடலத்தை உறவினர்களிடம் ஒப்படைக்க உத்தரவிட்ட நீதிவான், சட்ட மருத்துவ அறிக்கையை நீதிமன்றில் சமர்ப்பிக்குமாறு அறிவுறுத்தல் வழங்கினார். (ஐ–07)

# நமது பார்வை

உண்மை – நேர்மை – பக்கம் சாராமை
ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி – 021 222 3000,
மின்னஞ்சல் – kalaikkathirnews@gmail.com
இணையம் – https://kalaikathir.online

## கொள்கைகளின் போக்கு

கொள்கை, கோட்பாடுகள் குறித்து மேடைகளிலும் பொதுவெளிகளிலும் பேசுவது சுலபம்.

ஆனால் நடைமுறையில் அவற்றைப் பின்பற்றி, அதன் வழி செயற்படுவது மிகக் கஷ்டமானது. யதார்த்த சாத்தியங்கள் குறைவானது.

அதுவும் ஒரு சமரச முயற்சியை வெற்றிகரமாக முன்நகர்த்தும் எத்தனத்தில் வெறும் கொள்கை, கோட்பாடு எனப் 'பிடிச்சூறாவி' மாதிரி நிற்க முயற்சித்தால் அது தோற்றுப் போகும். முறிந்துவிடும்.

சமரச முயற்சிகள் தோற்றால், மீட்சிக்கு அல்லது தொடர் போராட்டத்துக்கான வாய்ப்புகள் அருகியிருக்கும் சூழ்நிலையில், மாற்று வழிக்கு இடம் இருக்கப் போவதில்லை என்பதும் தெளிவு.

இத்தகைய பின்புலத்தில் கொள்கை, கோட்பாடு என்று வெளியில் இருந்து கொண்டு வாய்ச் சவடால் விடுவது வேறு, மக்கள் பிரதிநிதிகளாக விடயத்தைப் பொறுப்பேற்று நகர்த்துவது வேறு.

பிரதான கொள்கைக் கோட்பாடுகளை விட்டு விலகாமல், விட்டுக் கொடுப்புகளோடு, விவகாரத்தை நகர்த்துவது என்பது தந்திரோபாயமும், மதிநுட்பமும் மிக்க சாணக்கியப் பணியாகும்.

'புலிகளின் தாகம் தமிழீழத் தாயகம்' என்று போரிட்டவர்கள் விடுதலைப் புலிகள்.

'அடைந்தால் தமிழீழம்; இல்லையேல் வீர சுவர்க்கம்' என்று போரிட்ட பல்லாயிரம் மறவர்களின் சமாதிகளின் மேல்தான் விடுதலைப்புலிகளின் வீர வரலாறு கட்டியெழுப்பப்பட்டது.

ஆனால், இலங்கையின் நீண்ட – நெடிய – வரலாற்றைக் கொண்ட இனப்பிரச்சினைக்கு நின்று, நிலைத்து, நீடிக்கக் கூடிய ஒரு சமரசத் தீர்வுக்கான எத்தனத்தில் – அதுவும் சர்வதேசப் பங்களிப்புடன் – முன்னெடுப்பதற்கும் புலிகள் இணங்கி வந்தனர்.

அதற்கான சமாதான முயற்சிகளில் விட்டுக்கொடுப்புடன் அவர்கள் பங்குபற்ற முன்வந்தமையால் அமைதி முயற்சிகள் – சமாதான எத்தனங்கள் – சாத்தியமாகின.

யதார்த்தப் புறச் சூழல்களைப் புரிந்து கொண்டு – அதே நேரம் தமது பிரதான கொள்கைக் கோட்பாடுகளின் தாற்பரியங்களை விட்டு விலகாமல் – ஒரு தந்திரோபாயப் போக்கைப் புலிகள் கடைப்பிடித்தனர்.

தங்களது விடாப்பிடியான கொள்கைப் பற்றுக்கும், சமாதான முயற்சிகளில் தாம் பின்பற்றிய விட்டுக் கொடுப்புப் போக்கும் இடையில் ஒடிய ஒரு மெலிதான மயிரிழையில் தங்கள் எத்தனங்களை அவர்கள் நகர்த்தினர்.

காலங்காலமாகத் தனித் தமிழீழம் என்ற கோட்பாட்டில் உறுதியாக நின்ற விடுதலைப் புலிகள், பேச்சு மேசைக்கு வர இணங்கியபோது, உள்ளக சுயநிர்ணய உரிமைகள் கோட்பாட்டின் அடிப்படையில் ஒரு சமஷ்டித் தீர்வை ஆராய்வதற்கு இணங்கினர்.

விடுதலைப் புலிகளின் இந்த முடிவை ஒரு பெரிய திருப்பமாகவும், கொள்கை மாற்றமாகவும் கூட (Paradigm Shift) பல தரப்புகளும் ஊடகங்களும் அப்போது சித்திரிக்க முயன்றன.

தலைவர் பிரபாகரன் தமது தனிநாட்டுக் கோரிக்கையைக் கைவிட்டுவிட்டார் என்றும் கூட அப்போது மோசமாக விமர்சித்தவர்கள் இல்லாமல் இல்லை.

வெளியில் இருந்து தீவிர கொள்கையைப் பேசி விட்டு, இணக்கத் தீர்வுக்கான சமரச முயற்சிகளுக்குச் செல்லும்போது இத்தகைய மோசமான விமர்சனங்கள் தவிர்க்கமுடியாதவை.

இப்போதும், தமிழ்க் கட்சிகள் ஐந்தும் கூட்டுச் சேர்ந்து முன்வைத்திருக்கும் 13 அம்சங்களும் கூட அத்தகைய தீவிர நிலைப்பாட்டைப் பிரதிபலிக்கின்றனதான்.

இந்த ஐந்து கட்சிகளில், மூன்றாக இடம்பெற்று, தமிழர் தரப்பின் இந்தத் தீவிரக் கொள்கை நிலைப்பாட்டைத் தாமும் சேர்ந்து இப்போது வலியுறுத்தி, பற்றி நிற்கின்றனர் என்று கூறும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் கூட, நல்லாட்சி அரசுடன் சமரசப் பேச்சு நடத்தி, புதிய அரசமைப்பு உருவாக்கத்துக்கான எத்தனங்களில் புதிய அரசமைப்புக்கான நகல் வடிவத்தை உருவாக்கும் அளவுக்கு முன்னேறியபோது அந்த விவகாரத்தில் இந்தத் தீவிரக் கொள்கைப் போக்கைப் பிரதிபலிக்கவோ, உறுதியாகப் பற்றி நிற்கவோ இல்லை.

வெளியில் – மேடையில் – கொள்கை நிலைப்பாடுகள் குறித்து முழங்குவதற்கும், பேச்சு மேசையில் – எத்தனங்களின்போது – உறுதியாய் பற்றி நிற்கும் கொள்கைக் கோட்பாட்டுக்கும் இடையில் சிறிய தளர்வுப் போக்கிருப்பது மறுக்க முடியாத சாத்தியமே.

மக்களும், சம்பந்தப்பட்ட தரப்புகளும் இவை பற்றி முன்னரே புரிந்திருக்கின்றமை முக்கியமானதாகும்.

# காலநிலை மாற்றத்தை எதிர்கொள்ள இளையோர் அணிதிரளும் பெருநிகழ்வு

## யாழில் தந்தை செல்வா கலையரங்கில்

யாழ்ப்பாணம்,ஒக்.22

ஒக்ரோபர் 24, 25 ,26 ஆம் திகதிகளில் உலகம் முழுவதும் காலநிலை மாற்றத்திற்கான தீர்வுகளை வலியுறுத்தி நூற்றைம்பதுக்கும் மேற்பட்ட நகரங்களில் இளையோர் அணிதிரள உள்ளார்கள். தென்னாசியாவில் டாக்கா, கராச்சி, ஐதராபாத், மும்பை போன்ற பெருநகரங்களின் வரிசையில் யாழ்ப்பாணமும் கிளைமத்தோனில் இணைகிறது. இலங்கையில் இருந்து உலகக் கிளைமத்தோன் அலையில் இணையும் ஒரே நகரம் நமது யாழ்ப்பாணமாகும்.

இவ்வருடம் யாழ்ப்பாணத்தில் கிளைமத்தோன் பெருநிகழ்வை முன்னெடுப்பதற்கான ஆரம்பக்கட்ட முயற்சிகளை OMNE (Organic Movement of North and East) மேற்கொண்டது.

இதில் டில்மா நிறுவனமும் துணை ஒழுங்கமைப்பாளர்களாக இணைந்து கொண்டது. யாழ்ப்பாண மாநகர சபை, யாழ்ப்பாண வர்த்தகத் தொழிற்றுறை மன்றம், வடக்கு மாகாணத் தகவல் தொழில்நுட்பச் சம்மேளனம், யாழ்ப்பாணப் பயில்களம், United Nations Global Compact - Sri Lanka Network, Biodiversity Sri Lanka ஆகியவர்கள் பிரதான பங்காளர்களாக இணைந்துகொண்டமை இம்முயற்சிக்கு மேலும் வலுச்சேர்த்தது.

பாடசாலை மட்டத்தில் காலநிலை மாற்றம் தொடர்பான விழிப்புணர்வை ஏற்படுத்தச் சிறகுகள் அமையமானது கட்டுரை, சித்திரம் மற்றும் விவாதப் போட்டிகளை கிளைமத்தோன் நிகழ்வை முன்னிட்டு ஒழுங்கு செய்தார்கள். இதனால் இம்முயற்சி இளையோர் மட்டத்தில் பரவலாக அறியப்பட்டது.

சுற்றுச்சூழல் சார்ந்த பல்வேறு பணிகளை முன்னெடுத்துவரும் பசுமைச் நிழல்கள், பசுமைச் சுவடுகள், ஔடதம், பூவன் மீடியா, Zero Plastic Forum, வல்லமை ஆகிய அமைப்புகள் இம்முயற்சியை மக்கள் மட்டத்தில் எடுத்துச் செல்லக் கைகொடுத்ததன் மூலம் இம்முயற்சி கிராமங்கள் வரை எடுத்துச் செல்லப்பட்டது.

இந்நிகழ்வில் இளம் தொழில் முயற்சியாளர்கள், புத்தாக்குநர்கள், பல்கலைக்கழக மாணவர்கள் எனப் பலரும் காலநிலை மாற்றத்தை எதிர்கொள்ளக்கூடிய புதுமையான கருத்திட்டங்களை நிபுணர் குழுவிடம் முன்வைக்கவுள்ளார்கள்.

இங்கு தெரிவு செய்யப்படும் கருத்திட்டங்களுக்குப் பெறுமதியான பரிசுகள் வழங்கப்படுவதோடு 2020 ஆம் ஆண்டில் பிரான்ஸில் நடைபெறும் உலகளாவிய போட்டிக்கு (Global Climathon Awards) விண்ணப்பிப்பதற்கான சந்தர்ப்பமும் கிடைக்கும்.

25 ஆம் திகதி பிற்பகல் 3 மணிமுதல் 6 மணிவரை நடைபெறும் இறுதி நிகழ்வில் போட்டிகளில் பங்குபற்றிய பாடசாலை மாணவர்கள் சகலருக்கும் சான்றிதழ்களும் வெற்றி பெற்றவர்களுக்கான பரிசுகளும் வழங்கப்படும்.

மேலும் விவாதம், ஆற்றுகை போன்ற அம்சங்களும் இணைக்கப்பட்டுள்ளன. சித்திர, மற்றும் புகைப்படக் கண்காட்சியானது மூன்று தினங்களும் காலை 9 மணிமுதல் 3 மணிவரை இடம்பெறும். இதில் பங்குபற்றும் பாடசாலை மாணவர்கள் தனியாக ஒழுங்கு செய்யப்பட்டுள்ள சித்திரக்கூடத்தில் படங்களை உடன் வரைந்து சமர்ப்பிக்கவும், காலநிலை மாற்றம் தொடர்பான வேறு போட்டிகளிற் பங்கேற்கவும் முடியும்.

பூமிப்பந்தை காலநிலை மாற்றத்தின் பேரழிவுகளில் இருந்து காக்கும் எம் இளையோரின் பல்வேறு செயற்பாடுகளை வெளிக்கொணரும் முயற்சி இது. காலத்தின் தேவையாக அமையும் இப்பணிக்கு வலுவூட்ட 24, 25, 26 ஆம் திகதிகளில் யாழ்ப்பாண மத்திய கல்லூரிக்கு அண்மையில் உள்ள தந்தை செல்வா கலையரங்கத்திற்கு உங்கள் பிள்ளைகளையும் அழைத்து வாருங்கள். எம் இளையோரின் அரும்பணிக்கு அணி சேருங்கள். மேலும் விபரங்களை அறிய 077 809 6226 என்ற அலைபேசி இலக்கத்தில் தொடர்புகொள்ளுங்கள்.

ஒழுங்கமைப்பாளர்கள்
கிளைமத்தோன் யாழ்ப்பாணம் 2019
Climathon Jaffna 2019

# தமிழரின் அபிலாஷையை வென்றெடுக்க தமிழ்க் கட்சிகள் ஒன்றுபட வேண்டும்

## தமிழர் சம உரிமை இயக்கம் வலியுறுத்தல்

யாழ்ப்பாணம்,ஒக்.22

தமிழ் மக்களின் அபிலாஷைகளை வென்றெடுப்பதற்குதமிழ்த் தேசியத்தில் பயணிக்கும் கட்சிகள் அனைத்தும் ஓரணியில் திரள்வது அவசியம் என தமிழர் சம உரிமை இயக்கம் தெரிவித்துள்ளது.

ஜனாதிபதித் தேர்தல் தொடர்பாக வடக்கு - கிழக்கு பல்கலைக்கழக மாணவர்களின் ஏற் பாட்டில் இடம்பெற்ற சந்திப்பில் ஐந்து தமிழ்க் கட்சிகள் ஒற்றுமையை வெளிப்படுத்தியுள்ளமை காலத்தின் தேவை எனவும் இதைத் தாம் வரவேற்கின்றனர் எனவும் மேற்படி இயக்கம் தெரிவித்துள்ளது.

இது தொடர்பாக, தமிழர் சம உரிமை இயக்கத்தின் இணைச்செயலாளர்களான வலி.வடக்கு பிரதேச சபை உறுப்பினர் தா.நிகேதன், வலி.மேற்கு பிரதேசசபை உறுப்பினர் ந.பொன்ராசா ஆகியோர் இணைந்து ஊடக அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளனர்.

அந்த அறிக்கையில்,

தமிழர்சம உரிமை இயக்கத்தின்தலைமைத்துவக் குழு சமகால அரசியல் நிலை தொடர்பாக கடந்த வியாழக்கிழமை கூடி ஆராய்ந்தது.

எதிர்வரும் ஜனாதிபதி தோதலில் தமிழ்க்கட்சிகள் என்ன நிலைப்பாட்டை எடுக்கவேண்டும் என வழிப்படுத்துவதற்காக வடக்கு - கிழக்கு பல்கலைக்கழக மாணவர்கள் முன்னெடுத்த வழிமுறை சிறந்தது. பல்கலைக்கழக மாணவர்களும்ஆறு அரசியல்கட்சிகளும் சேர்ந்து தயாரித்த பொது ஆவணத்தில் ஐந்து அரசியல் கட்சிகள் ஒப்பமிட்ட செயற்பாட்டை எமது குழு வரவேற்றுள்ளது.

நாட்டில் இடம்பெற்ற குண்டு வெடிப்புக்க ளுக்கு பின்னர் ஏற்பட்ட அச்சமான சூழலை எதிர்கொள்வதற்கு முஸ்லிம் தலைவர்கள் ஓரணியில் திரண்டமையைப் போல, இந்தத் தேர்தல் காலத்திலாவது தமிழ் அரசியல் கட்சிகள் தமக்கிடையேயான முரண்பாடுகளைக் கைவிட்டு ஒன்றுபடவேண்டும்.

தமிழர் சம உரிமை இயக்கம் ஒரு மக்கள் இயக்கம் என்ற அடிப்படையில், எமக்கு வாக்களித்த மக்களோடு தொடர்ந்தும் பயணிப்போம்.

தமிழ்மக்களின்நலன்களுக்காகதமிழ்த் தேசியத்தின் வழி நின்று எடுக்கப்படும் அனைத்து நடவடிக்கைகளுக்கும் தமிழர் சம உரிமை இயக்கம் பூரண ஒத்துழைப்பு வழங்குவது என எமது தலைமைத்துவக் குழு தீர்மானித்துள்ளது. - எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

**நாளை** 23.09.2019 புதன்கிழமை
நட்சத்திரம்: மிருகசீரிடம் பி.ப 4.06 வரை இராகுகாலம் : 9.02 – 10.32
திதி : ஷஷ்டி பி.இ. 4.42 வரை சுப நேரம் : 3.02 – 4.32

# தேர்தலைக் கண்காணிக்க 60 பேரை அனுப்புகிறது ஐரோப்பிய ஒன்றியம்

கொழும்பு, ஒக். 22

ஜனாதிபதித் தேர்தலைக் கண் காணிக்க ஐரோப்பிய ஒன்றியம், குறுகிய கால, மற்றும் நீண்டகால அடிப்படையில் 60 கண்காணிப்பாளர்களைப் பணியில் அமர்த்தவுள்ளது.



ஐரோப்பிய ஒன்றியத் தேர்தல் கண்காணிப்பு அணி ஒன்பது மாகாணங்களிலும் 30 நீண்டகாலக் கண்காணிப்பாளர்களை பணியில் அமர்த்தவுள்ளது.

தேர்தலுக்கு முந்திய நாள்களில் இலங்கை வரும் மேலும் 30 பேர் கொண்ட குறுகியகாலக் கண்காணிப்பாளர்கள் நாடெங்கும் வாக்களிப்பு, வாக்கு எண்ணிக்கை, தேர்தல் முடிவு அறிவிப்பு தொடர்பான பணிகளைப் பார்வையிடுவார்கள்.

இலங்கையில் தேர்தல் கண்காணிப்பில் ஈடுபடவுள்ள ஐரோப்பிய ஒன்றியக் கண்காணிப்பாளர்களுக்கு ஐரோப்பிய நாடாளுமன்றத்தின் போர்த்துக்கல் நாட்டுப் பிரதிநிதியான மரிசா மாட்டிஸ், தலைமை தாங்குவார்.

டிமித்ரா இயானோ துணைத் தலைமைக் கண்காணிப்பாளராக செயற்படுவார் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது. (ஐ)

# தேர்தலைப் பகிஷ்கரிக்குமாறு ஒருபோதுமே கோரமாட்டோம்

## யோகேஸ்வரன் எம்.பி. தெரிவிப்பு

மட்டக்களப்பு, ஒக். 22

தேர்தலைப் பகிஷ்கரிக்குமாறு எந்தக் காரணம் கொண்டும் மக்களிடம் கூறமாட்டோம் என மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சீ.யோகேஸ்வரன் தெரிவித்தார்.

மட்டக்களப்பில் இடம்பெற்ற நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு கூறினார்.

தொடர்ந்தும் கருத்து வெளியிட்ட அவர்–

ஜனாதிபதித் தேர்தல் அறிவிக்கப்பட்டுள்ளது. மூன்று கட்சியாக இருந்த நாங்கள் ஒருதீர்மானத்தை எடுப்பதற்காக ஐந்து கட்சிகளாக மாறியுள்ளோம்.



தற்போது இணைந்துள்ள கட்சிகளும் முன்னர் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பில் இருந்து பிரிந்து சென்ற கட்சிகளாகவே உள்ளன. தமிழ் மக்களின் நலனை மையமாகக்கொண்டு நடவடிக்கைகளை முன்னெடுத்து வருகின்றோம்.

வடக்கு–கிழக்கில் தமிழ் மக்கள் பெரும்பான்மையாக வாழ்கின்றனர். எங்களது மண்ணையும் உரிமையையும் சூறையாடுவதற்கு எந்த வேட்பாளருக்கும் இடமளிக்க மாட்டோம். அதேபோன்று விரைவில் ஐந்து கட்சிகளும் இணைந்து யாருக்கு வாக்களிக்கவேண்டும் என்பதை மக்களுக்குக் கூறும்.

கடந்த காலத்தில் ஆட்சியாளர்களைக் கொண்டுவருவதற்கு மிகவும் கஷ்டப்பட்டோம். அதன் பலனை நாங்கள் அனுபவிக்கவில்லை. ஜனாதிபதித் தேர்தல் தொடர்பாக முடிவெடுக்கும்போது பல விடயங்களை ஆராய்ந்து முடிவுகளை எடுப்போம். அதனை மக்களுக்கு தெளிவுபடுத்துவோம்– என்றார். (ஐ)

# குளறுபடிகள் நடந்தால் வாக்களிப்பு ரத்தாகும்

## தேர்தல்கள் ஆணைக்குழு எச்சரிக்கை

கொழும்பு, ஒக். 22

அஞ்சல் வாக்குச் சீட்டு புள்ளடியிடும் மையங்களில் ஏதாவது தலையீடுகளோ அல்லது அச்சுறுத்தும் முயற்சிகளோ இடம் பெற்றால், அந்த மையங்களில் இடம்பெற்ற வாக்களிப்பு ரத்து செய்யப்படும் என்று தேர்தல் ஆணைக்குழுவின் தலைவர் மஹிந்த தேசப்பிரிய எச்சரித்துள்ளார்.



இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில்–

அரச பணியாளர்கள் அஞ்சல் வாக்குச் சீட்டுக்களில் தமது விருப்பத் தெரிவைக் குறிப்பிடுவதில், இரகசியத்தையும் சுதந்திரத்தையும் உறுதி செய்வதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. யாருக்கு வாக்களிக்கப்பட்டது என்பதைக் கண்டறிய முடியாது.

அஞ்சல் மூலம் வாக்களிக்கத் தகுதி பெற்றவர்கள் எதிர்வரும் 31ஆம் திகதியும் நவம்பர் முதலாம் திகதியும் வாக்களிக்க முடியும்.

பொலிஸ் திணைக்களத்தைச் சேர்ந்தவர்கள் நவம்பர் 4ஆம், 5ஆம் திகதிகளில் வாக்களிக்கலாம்.

இந்த நாள்களில் வாக்களிக்க முடியாதவர்களுக்கு நவம்பர் 7ஆம் திகதி வாக்களிக்க வசதிகள் செய்து கொடுக்கப்படும்.

தேர்தல் திணைக்கள அதிகாரிகளும், நவம்பர் 7ஆம் திகதி வாக்களிக்க முடியும்– என்றார். (ஐ)

# முக்கிய அறிவிப்பை நாளைய தினம் வெளியிடுவாராம் சிவாஜிலிங்கம்

கொழும்பு, ஒக். 22

தனக்கு இதுவரை பாதுகாப்பு வழங்கப்படவில்லை என்றும், தமக்கு தொடர்ந்து அச்சுறுத்தல் இருந்து வருவதாகவும் ஜனாதிபதி வேட்பாளர் எம்.கே.சிவாஜிலிங்கம் தெரிவித்தார்.

வாழைச்சேனை பலநோக்குக் கூட்டுறவுச் சங்கக் கட்டடத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

எனக்கு இதுவரை பாதுகாப்பு வழங்கப்படவில்லை. தேர்தல் ஆணையாளருக்கு எழுத்து மூலம் தெரிவித்திருந்தும் எது விதமான ஏற்பாடுகளும் செய்யப்படவில்லை.

தொடர்ந்து அச்சுறுத்தல் இடம்பெற்று வருகின்றது. போட்டியிடும் 35 வேட்பாளர்களுக்கும் பாரபட்சமின்றிப் பாதுகாப்பு வழங்கப்படவேண்டும். கட்டுப் பணம்செலுத்தியநேரம்முதல் தமக்கு கைத்தொலைபேசி ஊடாக அச்சுறுத்தல் விடுக்கப்பட்டு வருகின்றது. இதனைத் தொடர்ந்து கைத்தொலைபேசியைச் சிறிது நாட்கள் நிறுத்தி வைத்திருந்தேன்.



சிங்கள பௌத்த தேசம் சிங்கள பௌத்த பேரினவாதிகளுக்கு பாதுகாப்பு வழங்குமே தவிர சிறுபான்மையினருக்கு வழங்காது.

இன்று செவ்வாய்க்கிழமையன்று வேட்பாளர்களுக்கான சந்திப்பொன்று தேர்தல் ஆணைக்குழுத் தவிசாளரினால் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. அந்தச் சந்திப்பில் இந்த விடயம் தொடர்பாக தெளிபடுத்தவுள்ளேன்.

அடுத்த கட்டமாக 23ஆம் திகதி எனது எதிர்கால அரசியல் நகர்வு தொடர்பாக என்னசெய்யப்போகின்றேன் என்பதைக் கொழும்பில் வைத்து ஊடகங்களுக்கு அறிவிக்கவுள்ளேன்- என்றார். (ஐ)

# கட்டுநாயக்கவுக்கு வந்த இரண்டு விமானங்கள் மத்தளவில் தரையிறக்கம்

கொழும்பு, ஒக். 22

கட்டுநாயக்க பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையத்துக்கு வருகைதந்த இரண்டு விமானங்கள், மத்தள மஹிந்த ராஜபக்ஷ விமான நிலையத்துக்கு திருப்பியனுப்பப்பட்டன.

கட்டுநாயக்கவில் நிலவும் மழையுடனான வானிலையால், சவூதி அரேபியா மற்றும் குவைத்திலிருந்து வருகை தந்த 2 விமானங்களே மத்தள விமான நிலையத்துக்கு திருப்பியனுப்பப்பட்டுள்ளன.

நேற்றுக் காலை 6.15 மணியளவில் இந்த விமானங்கள் கட்டுநாயக்க விமான நிலையத்தை வந்தடையவிருந்தன எனக் கூறப்பட்டது. (ஐ)




# சீனாவில் இருந்து வெளியேறும் நிறுவனங்களை இந்தியாவின் பக்கம் ஈர்ப்பதற்கு தீவிர முயற்சி!

## மத்திய நிதி அமைச்சர் நிர்மலா சீதாராமன் நடவடிக்கை



வொஷிங்டன்,ஒக்.22

சீனாவில் இருந்து வெளியேறி இந்தியாவில் முதலீடு செய்ய விரும்பும் வெளிநாட்டு நிறுவனங்களுக்கான செயல்திட்டத்தை தயாரிக்க இருப்பதாக இந்திய மத்திய நிதி அமைச்சர் நிர்மலா சீதாராமன் தெரிவித்துள்ளார்.

வொஷிங்டன்டிசியில் செய்தியாளர்களிடம் பேசிய அவர், சீனாவில் இருந்து வெளியேறி மற்ற நாடுகளில் முதலீடு செய்ய விரும்பும் பன்னாட்டு நிறுவனங்கள், நிச்சயம் இந்தியாவைப் பரிசீலிக்கும் என்றார்.

இந்தியா விருப்பத்திற்குரிய நாடாக இருக்கிறது என்பதை

எனவே அந்த நிறுவனங்களின்தலைவர்களைச் சந்தித்து, இந்தியாவில் முதலீடுசெய்ய அழைப்புவிடுக்க வேண்டியது இந்திய அரசுக்கு முக்கியமானது என்று அவர் குறிப்பிட்டார். அதற்கான செயல்திட்டத்தைத் தான்தயாரித்து அவர்களை அணுக இருக்கிறார் எனவும், ஏன் முதலீடுசெய்வதில் யும் விளக்க இருக்கிறார் எனவும் அவர் கூறினார். பன்னாட்டு நிறுவனங்கள் முதலீடு செய்வதற்கு ஏற்ற சூழலை உருவாக்க இந்தியா விரும்புகிறது என்றும் அவர் தெரிவித்தார்.

உலகளாவிய பொருளாதார வளர்ச்சி வேகத்தை மீட்டெடுக்க ஜி20 நாடுகள் அமைப்பு கூட்டாக நடவடிக்கை எடுக்க வேண்டியது அவசியம் என்றும் நிர்மலா சீதாராமன் வலியுறுத்தினார்.

இந்தியா – அமெரிக்கா இடையேயான வர்த்தக ஒப்பந்தப் பேச்சு முழு வேகத்தில் நடைபெற்று வருவதாகவும் நிர்மலா சீத்தாராமன் தெரிவித்தார்.

## காஷ்மீர் பிரச்சினையை துருக்கி விமர்சித்ததால் அந்த நாட்டுக்கான மோடியின் பயணம் ரத்து!



புதுடில்லி,ஒக்.22

காஷ்மீர் பிரச்சினையை இந்தியாவுக்குப் பாதிப்பை ஏற்படுத்தும் வகையில் துருக்கி விமர்சித்திருப்பதாகக் கருதும் இந்தியா அதன் காரணமாக துருக்கிக்கான இந்தியப் பிரதமர் மோடியின் பயணம் ரத்துச் செய்யப்பட்டிருப்பதாக அறிவித்திருக்கிறது.

கடந்த செப்ரெம்பரில் ஐ.நா. பொதுச் சபைக் கூட்டத்தில், காஷ்மீர் பிரச்சினை பற்றி துருக்கி அதிபர் எண்ட்ரோகன் பேசியது, காஷ்மீர் பிரச்சினையை நீதி, சமத்துவத்தின் அடிப்படையிலான பேச்சின் மூலம் தீர்க்க வேண்டுமே தவிர மோதல் மூலம் கிடையாது. 'காஷ்மீர் மோதல்' சர்வதேச சமூகத்திடமிருந்து போதுமான கவனத்தைப் பெறவில்லை, எனக் குறிப்பிட்டார்.

துருக்கி அதிபரின் பேச்சுக்கு இந்தியா பதிலடி கொடுக்கத் தீவிரம் காட்டி வருகிறது.

இந்நிலையில் மத்திய வெளியுறவு அமைச்சகம் வெளியிட்டுள்ள செய்தியில் –

பிரதமர் மோடி இம்மாத இறுதியில் 2 நாள் பயணமாக துருக்கி செல்ல இருந்தார். சவுதி அரேபியா சென்று அங்கிருந்து துருக்கி தலைநகர் அங்காரா செல்ல இருந்தார். அங்கு வரும் 27,28 ஆம் திகதிகளில் மெகா முதலீட்டாளர்கள் மாநாடு நடக்கிறது. இதில் மோடி பங்கேற்கத் திட்டமிடப்பட்டிருந்தது. துருக்கி அதிபரின் பாகிஸ்தான் ஆதரவுப் பேச்சையடுத்து மோடியின் பயண திட்டங்கள் ரத்து செய்யப்பட்டுள்ளன. – இவ்வாறு அந்தச் செய்தியில் கூறப்பட்டுள்ளது.

## இந்தியாவுடன் கடிதப் பரிமாற்றத்தை முழு அளவில் நிறுத்தியது பாகிஸ்தான்

புதுடில்லி,ஒக்.22

இந்தியாவுடனான கடிதப் போக்குவரத்தை பாகிஸ் தான் அரசு நிறுத்தி உள்ளது. இந்தியாவில் இருந்து வரும் மற்றும் இந்தியாவிற்கு செல்லும் கடித போக்குவரத்தை நிறுத்துவதாக பாகிஸ்தான் தெரிவித்துள்ளது.

காஷ்மீரில் 370 சட்டப்பிரிவு ரத்து செய்யப்பட்ட பிறகு இந்தியா – பாகிஸ்தான் இடையே பதற்ற நிலையே காணப்படுகிறது. இதுவரை 3 முறை போர் ஏற்படும் சூழல் அமைந்துள்ளது.


இந்நிலையில் ஓகஸ்ட் 27 ஆம் திகதி, பாகிஸ்தா னுக்குக் கடிதங்கள் அனுப்புவதை நிறுத்தும்படி இந்தியாவை பாகிஸ்தான் கட்டாயப்படுத்தியது. இது பற்றி இந்தியத் தபால் சேவைத்துறை இயக்குனர் ஆர். வி.சவுத்ரி கூறுகையில் –

பாகிஸ்தானின் இந்த முடிவு முற்றிலும் தவறா னது. பாகிஸ்தான் இது போன்ற நடவடிக்கை மேற்கொள்வது இதுவே முதல் முறை. இந்த உத்தரவை பாகிஸ்தான் எப்போது விலக்கிக் கொள்ளும் எனத் தெரியவில்லை. – என்றார்.

## ஹரியானாவில் வாக்களிக்க சைக்கிளில் வந்த முதல்வர்!

### டிராக்டரில் வந்தார் ஐ.ஐ.க. தலைவர்



ஹரியானா சட்டசபைத் தேர்தல் நேற்று நடைபெற்றது.

முதல்வர் கட்டார் சைக்கிளிலும், ஜனநாயக ஜனதா கட்சித் தலைவர் துஷ்யத் சவுதாலா டிராக்டரிலும் வந்து வாக்களித்தனர்.

ஹரியானாவில் 90 சட்டப்பேரவைத் தொகுதிகள் உள்ளன. ஹரியானா தேர்தலில் ஆளும் பா.ஜ.க., காங்கிரஸ், ஜனநாயக ஜனதா கட்சி, இந்திய தேசிய லோக் தளம் ஆகிய கட்சிகளுக்கு இடையே கடும் போட்டி நிலவுகிறது.

பா.ஜ.கவும் காங்கிரஸும் 90 தொகுதிகளிலும் வேட்பாளர்களை நிறுத்தியுள்ளன. இந்திய தேசிய லோக் தளம் 81 தொகுதிகளிலும் மீதமுள்ள தொகுதிகளில் அதன் கூட்டணி கட்சியான அகாலி தளமும் போட்டியிடுகின்றன. ஆம் ஆத்மி 46, பகுஜன் சமாஜ் 87, ஸ்வராஜ் இண்டியா 27 தொகுதிகளில் வேட்பாளர்களை நிறுத்தியுள்ளன.

ஆட்சியமைக்க 46 எம்.எல்.ஏக்களின் ஆதரவு தேவை என்ற நிலையில் ஆளும் பா.ஜ.க. ஆட்சியை தக்க வைக்கத் தீவிர பிரசாரம் செய்துள்ளது. பிரதமர் மோடி உட்பட பா.ஜ.க. மூத்த தலைவர்கள் வாக்கு சேகரித்துள்ளனர்.

இந்த தொகுதிகளில் 1,169 வேட்பாளர்கள் களத்தில் உள்ளனர். இதில் 105 பேர் பெண்கள். மாநிலத்தில் 1.83 கோடி பேர் வாக்குரிமை பெற்றுள்ளனர். அவர்களுக்காக 16,357 வாக்குச் சாவடிகள் அமைக்கப்பட்டுள்ளன. சுமார் 75,000இற்கும் மற்பட்ட பாதுகாப்புப் படை வீரர்கள் பணியில் ஈடுபட்டுள்ளனர்.

முதல்வர் மனோகர்லால் கட்டார் வாக்குச்சாவடிக்கு சைக்கிளில் வந்து வாக்களித்தார்.

அதுபோலவே ஜனநாயக ஜனதா கட்சித் தலைவரும், ஓம் பிரகாஷ் சவுதாலாவின் பேரனுமான துஷ்யந்த் சவுதாலா தனது குடும்பத்தினருடன் டிராக்டரில் வந்து வாக்களித்தார்.



# மிக நீண்ட இடைநில்லா விமானப் பயண முயற்சி 19 மணி நேரம் தொடர்ந்து பறந்த ஆஸி. விமானம்

சிட்னி,ஒக்.22

உலகின் மிக நீண்ட இடைநில்லாப் பயணம் மேற்கொள்ளும் ஆஸ்திரேலிய விமானம் எங்குமே நிற்காமல் 19 மணி 16 நிமிட நேரம். தொடர்ச்சியாகப் பறந்து முதல் சோதனையை வெற்றிகரமாக நிறைவு செய்துள்ளது.

சர்வதேச அளவில் மிக நீண்ட தூரத்திற்கு இடைநில்லா விமான சேவையை வழங்குவதில் விமான நிறுவனங்களுக்கு இடையே கடும் போட்டி நிலவி வருகிறது. அந்த வரிசையில், உலகிலேயே மிக நீண்ட தூரத்திற்கு எங்கும் நிறுத்தாமல் செல்வதற்கான முயற்சியில் ஆஸ்திரேலியாவின் குவென்டாஸ் விமான நிறுவனம் களமிறங்கி உள்ளது.

இதற்கான முதல் சோதனையாக அமெரிக்காவின் நியூயோர்க்கில் இருந்து ஆஸ்திரேலியாவின் சிட்னி வரை விமானத்தை இயக்க முடிவு செய்யப்பட்டது. இந்த சோதனையில் போயிங் 787-9 ரக விமானம் ஈடுபடுத்தப்பட்டது. சனியன்று நியூயோர்க்கில் இருந்து புறப்பட்ட இந்த விமானம், 19 மணி 16 நிமிட நேரம் வானில் தொடர்ச்சியாக 16,200 கிலோ மீற்றர் பயணம் செய்து சிட்னி விமான நிலையத்தை ஞாயிறு காலை வந்தடைந்தது.

இதில், விமான ஊழியர்கள் உட்பட 49 பேர் பயணம் செய்தனர். 4 விமானிகள் இணைந்து விமானத்தை இயக்கினர்.




இதில் பயணம் செய்தவர்கள் அனைவரும் விமான நிறுவன அதிகாரிகள், ஆராய்ச்சியாளர்கள், மருத்துவக் குழுவினர்களே. இப்பயணத்தில், வானில் பல்வேறு நேர மாற்றங்களுடன் பயணிப்பதால், பயணிகளின் பயணக் களைப்பு எப்படியிருக்கும், விமானிகளின் மூளை நரம்புகளின் செயல்பாடு உள்ளிட்டவை குறித்து ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டன.

விமானத்தில் தொடர்ச்சியாக 16,200 கி.மீ.பறப்பதற்கு தேவையான அளவு எரிபொருள் நிரப்பப்பட்டிருந்தது. விமானத்தினுள் எந்தச் சரக்குகளும், அதிக பாரங்களும் ஏற்றப்படவில்லை. சோதனை முயற்சி என்பதால் 49 பயணிகள் மட்டுமே பயணித்தனர். பயணத்தின் போது, பயணிகள் ஜன்னல் வழியாக வேடிக்கை பார்க்க வேண்டாம் என கேட்டுக் கொள்ளப்பட்டது. ஏனெனில், இரவு பகல் என மாறி மாறிக் கால நேரம் மாறுவதை அவதானிப்பது அவர்களைச் சோர்வடையச் செய்யும் என்பதால் இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது.

தற்போது இந்தச் சோதனை முயற்சி வெற்றிகரமாக முடிந்திருப்பது ஒரு வரலாற்று நிகழ்வு என குவென்டாஸ் விமான நிறுவன சிரேஷ்ட அதிகாரி ஆலன் ஜாய்ஸ் கூறியுள்ளார். இது போன்று 3 சோதனைகளை நடத்த முடிவு செய்யப்பட்டுள்ளது. அடுத்த மாதம் இரண்டாவது முயற்சியாக லண்டன் முதல் சிட்னி வரை இடைநில்லா விமானம் இயக்கப்பட உள்ளது.

மூன்று சோதனை முயற்சிகளும் வெற்றிகரமாக அமைந்தால், 2022 அல்லது 2023 இல் மிக நீண்ட வழித்தடங்களில் இடைநில்லா பயணிகள் விமான சேவை தொடங்கப்படும் என குவென்டாஸ் அறிவித்துள்ளது.

தற்போது சிங்கப்பூரில் இருந்து நியூயோர்க் நோக்கி இயக்கப்படும் சிங்கப்பூர் ஏர்லைன்ஸ் விமானமே மிக நீண்ட தூரம் பயணம் செய்யும் விமானமாகும். இது இடைநில்லாமல் 18 மணி நேரம் 25 நிமிடங்களுக்கு பயணிக்கிறது.

ஒக்லாந்து-டோஹா இடையே இயக்கப்படும் கத்தார் ஏர்வேஸ் விமானம் 17 மணி நேரம் 40 நிமிட பயணம் மேற்கொள்கிறது.

பேர்த்-லண்டன் இடையே இயக்கப்படும் குவென்டாஸ் 17 மணி நேரம் 20 நிமிடங்கள் பயணம் செய்கிறது.

*பிரெக்ஸிட்' விவகார இழுபறி நீடிப்பு:*

# ஐரோப்பிய ஒன்றியத்துக்கு பிரிட்டிஷ் பிரதமர் எழுதிய மாறுபாடான கடிதங்களால் குழப்பம்

### 31 ஆம் திகதிக்குள் அது நிறைவேறுமா என்பது சந்தேகமே

லண்டன்,ஒக்.22

ஐரோப்பிய கூட்டமைப்பில் இருந்து இங்கிலாந்து வெளியேறும் 'பிரெக்ஸிட்' நடவடிக்கை கடந்த சில ஆண்டுகளாகவே சிக்கலை எதிர்கொண்டு வருகிறது. இந்த பிரச்சினையால் டேவிட் கமரூன், தெரசா மே ஆகியோர் பிரிட்டிஷ் பிரதமர் பதவியைத் துறந்தனர்.

அவர்களைத் தொடர்ந்து இங்கிலாந்தின் புதிய பிரதமராகப் பொறுப்பேற்று இருக்கும் போரிஸ் ஜோன்சனும் 'பிரெக்ஸிட்'டை நிறைவேற்ற முடியாமல் தவித்து வருகிறார். ஐரோப்பிய கூட்டமைப்புடன் ஏற்படுத்திக்கொண்ட ஒப்பந்தத்தின்படி வருகிற 31ஆம் திகதிக்குள் 'பிரெக்ஸிட்' நிறைவேறும் என அவர் உறுதிபட கூறியிருந்தார்.

இந்த நிலையில் 'பிரெக்ஸிட்' தொடர்பான வரலாற்று சிறப்புமிக்க வாக்கெடுப்பு இங்கிலாந்து நாடாளுமன்றத்தில் நேற்று முன்தினம் நடைபெற்றது. அப்போது, போரிஸ் ஜோன்சன் தாக்கல் செய்த திருத்தப்பட்ட 'பிரெக்ஸிட்' ஒப்பந்தத்தை எம்.பி.க்கள் வழக்கம் போல் நிராகரித்தனர்.

அத்துடன் 'பிரெக்ஸிட்டு' க்கான காலக்கெடுவை அடுத்த ஆண்டு ஜனவரி வரை நீடிக்க கோரும் சட்டப்பிரேரணை தாக்கல் செய்யப்பட்டு வாக்கெடுப்பு நடத்தப்பட்டது. இந்த வாக்கெடுப்பில் 322 பேர் சட்டத்துக்கு ஆதரவாகவும், 306 பேர் சட்டத்துக்கு எதிராகவும் வாக்களித்தனர்.

இதனால் போரிஸ் ஜோன்சன் ஐரோப்பிய கூட்டமைப்பு தலைவர்களிடம் 'பிரெக்ஸிட்டு'க்கான காலக்கெடுவை நீடிக்க வலியுறுத்தும் கட்டாயத்துக்குத் தள்ளப்பட்டார்.

அதன்படி சட்டப்படியான கடமையை நிறைவேற்றும் வகையில், ஐரோப்பிய கூட்டமைப்பில் இருந்து இங்கிலாந்து வெளியேறுவதற்கான காலக்கெடுவை நீடிக்கவேண்டும் என்று கோரி ஐரோப்பிய கூட்டமைப்புக்கு போரிஸ் ஜோன்சன் கடிதம் அனுப்பினார். ஆனால், அந்தக் கடிதத்தில் அவர் கையெழுத்து போடவில்லை.

அந்த கடிதத்தில் அவர் 'பிரெக்ஸிட்'டுக்கான காலக்கெடுவை அடுத்த ஆண்டு (2020) ஜனவரி 31 ஆம் திகதி வரை நீடிக்க வேண்டுமென இங்கிலாந்தின் சட்டத்துக்குட்பட்டு கேட்டுக்கொள்கிறார் எனக் குறிப்பிட்டு உள்ளார்.



அதே சமயம் அவர் தனது கையெழுத்துடன் இரண்டாவதாக ஒரு கடிதத்தை ஐரோப்பிய கூட்டமைப்புக்கு அனுப்பினார். அதில் அவர் முதலாவதாக அனுப்பப்பட்ட கடிதம் தன்னுடைய கடிதம் இல்லை என்றும், இங்கிலாந்து நாடாளுமன்றத்தின் கடிதம் என்றும் தெரிவித்துள்ளார்.

மேலும் 'பிரெக்ஸிட்'டை தாமதப்படுத்துவது தவறு என்று தான் தனிப்பட்ட முறையில் நினைக்கிறார் எனவும் அந்தக் கடிதத்தில் அவர் குறிப்பிட்டுள்ளார். அத்துடன், கடந்த வாரம் ஐரோப்பிய கூட்டமைப்பு தலைவர்களோடு எட்டப்பட்ட திருத்தப்பட்ட 'பிரெக்ஸிட்' ஒப்பந்தத்துக்கு நாடாளுமன்றத்தின் ஒப்புதலை பெற அரசு தொடர்ந்து முயற்சிக்கும் என்றும், வருகிற 31 திகதிக்குள் அதைச் செய்து முடிக்க முடியும் என்று தான் நம்புகிறார் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

இதற்கிடையே 'பிரெக்ஸிட்'டுக்கான காலக்கெடுவை நீடிக்க கோரும் போரிஸ் ஜோன்சனின் கடிதம் கிடைத்து இருப்பதாகவும் இது குறித்து சக தலைவர்களுடன் பேசி முடிவு எடுக்கப்படும் எனவும் ஐரோப்பிய கூட்டமைப்பின் தலைவர் டொனால்ட் டஸ்க் தெரிவித்துள்ளார்.

எனினும் இங்கிலாந்தின் இந்தக் கோரிக்கையை ஐரோப்பிய கூட்டமைப்பு நிராகரிப்பதற்கு அதிக வாய்ப்புகள் இருக்கின்றன எனத் தகவல்கள் தெரிவிக்கின்றன. அப்படி நிராகரிக்கப்படும் பட்சத்தில் ஒப்பந்தம் இல்லாமலேயே வருகிற 31 ஆம் திகதிக்குள் ஐரோப்பிய கூட்டமைப்பில் இருந்து இங்கிலாந்து வெளியேறும் என எதிர் பார்க்கப்படுகிறது.

# எட்டு ஆயிரம் ஆண்டுகள் பழைமையான முத்து அபுதாபியில் கண்டுபிடிப்பு!

அபுதாபி,ஒக்.22

8 ஆயிரம் ஆண்டுகள் பழைமையான முத்து ஒன்று அபுதாபியில் கண்டுபிடிக்கப்பட்டு உள்ளது. இதுவே உலகின் பழைமையான முத்து எனத் தொல்லியல் ஆய்வாளர்கள் தெரிவித்து உள்ளனர்.

நவீன தொழில்நுட்பங்கள், விஞ்ஞான கண்டுபிடிப்புகள் என இன்றைய உலகம் நவநாகரிகத்தோடு விளங்கினாலும், மனிதனின் தோற்றம் மற்றும் பழைமையான நாகரிகங்களை பற்றி அறிவதில் உலக நாடுகள் மிகுந்த ஆர்வம் காட்டி வருகின்றன. தமிழகத்தின் கீழடி முதல் உலக நாடுகள் அனைத்திலும் நடந்து வரும் தொல்பொருள் ஆய்வுகள் இதையே கட்டியம் கூறுகின்றன.

இந்த ஆய்வுகளில் அடிக்கடி கிடைக்கும் பழங்கால அரிய பொக்கிஷங்கள், அரசுகளின் ஆவலை மேலும் தூண்டி விடுவதுடன், இத்தகைய ஆய்வுகளை மேலும் பரவலாக்கும் அவசியத்தையும் அளிக்கின்றன. அந்தவகையில் ஐக்கிய அரபு அமீரக தலைநகரான அபுதாபியில் 8 ஆயிரம் ஆண்டுகள் பழைமையான முத்து ஒன்று சமீபத்தில் கிடைத்துள்ளது.



அங்குள்ள மறவா தீவில் பல ஆண்டுகளாகத் தொல்பொருள் ஆய்வுகள் நடந்து வருகின்றன. இதில் கற்காலத்தை சேர்ந்த கற்சிற்பங்கள், பீங்கான் பொருள்கள், ஓடு மற்றும் கற்களால் செய்யப்பட்ட மணிகள் என ஏராளமான பழங்கால பொருள்கள் கிடைத்து வருகின்றன.

இதில் மிகப்பெரிய பொக்கிஷமாக, பழைமையான முத்து ஒன்றும் சமீபத்தில் கிடைத்தது. உலகின் பழைமையான முத்து என கருதப்படும் இந்த இயற்கை முத்து சுமார் 8 ஆயிரம் ஆண்டுகள் பழைமையானது எனத் தெரியவந்துள்ளது.

குறிப்பாக கி.மு.5800 முதல் 5600 வரையிலான ஆண்டுகளுக்கு இடைப்பட்டதாக இது இருக்கும் எனக் கண்டறியப்பட்டு உள்ளது. அதாவது கற்காலத்தின் கடைசிப் பகுதியைச் சேர்ந்தது என ஆய்வாளர்கள் தெரிவித்தனர்.

இந்த முத்து கண்டுபிடிக்கப்பட்டதால், அமீரக தொல்பொருள் ஆய்வாளர்களிடம் மிகுந்த மகிழ்ச்சி ஏற்பட்டு உள்ளது. 'அபுதாபி முத்து' என பெயரிடப்பட்டு உள்ள இந்த முத்து, அபுதாபியில் உள்ள லூவர் அருங்காட்சியகத்தில் (பாரிஸில் உள்ள புகழ்பெற்ற அருங்காட்சியகத்தின் கிளை) 30 ஆம் திகதி முதல் பொதுமக்களின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.

காலைக்கதிர்
Kalaikathir





# கௌதாரிமுனை காணிகளை தனியாருக்கு தாரைவார்க்கும் முயற்சி

பூநகரி கௌதாரிமுனை பகுதியில் தனியார் ஒருவருக்குபெருமளவுநிலம் வழங்கப்பட எடுக்கப்படும் முயற்சியையடுத்து, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் சி.சிறிதரன் நேற்றுமுன் தினம் ஞாயிறன்று அங்கு கள விஜயம் மேற்கொண்டார்.

அந்தப் பகுதி மக்களுடனான சந்திப்பின் போது, தமது பிரதேச காணிகளை தனியாருக்கு தாரைவார்க்க மேற்கொள்ளப்படும் முயற்சியை தடுத்து நிறுத்துமாறு கோரிக்கை விடுத்தனர்.

அத்துடன், அங்கு காணிகளைப் பெற முயற்சிக்கும் தனியார் தரப்பிலிருந்து, நாம் கோட்டாபயவின் ஆள்கள் என தம்மை அச்சுறுத்துகின்றனர் எனவும் முறையிட்டுள்ளனர்.

கௌதாரிமுனையில் தனியார் ஒருவருக்கு 96 ஏக்கர் நிலம் வழங்க ஆளுநர் அலுவலகம் ஊடாகநடவடிக்கை மேற்கொள்ளப்படுகிறது. இது அரசியல் ரீதியான நிலம் வழங்கும் முயற்சியென பிரதேசவாசிகள் குற்றம் சுமத்துகிறார்கள்.

இதையடுத்து நாடாளுமன்ற உறுப்பினர் சி.சிறிதரன், கரைச்சி பிரதேசசபை தவிசாளர் வேழமாலிகிதன் ஆகியோரைக் கொண்ட குழுவினர் நேற்றுமுன்தினம் அந்தப் பகுதிக்கு களவிஜயம் மேற்கொண்டிருந்தனர்.

நிலம் வழங்குவது தொடர்பாக ஆளுநர் தம்மை அழைத்து பேசியபோது, நான் இந்த ஜனாதிபதியின் ஆள். இந்த காணிகளை பெறவுள்ளவர் எதிர்கால ஜனாதிபதியின் ஆள் என தெரிவித்தார்கள் என மக்கள் தெரிவித்துள்ளனர்.

சோழர்கால வரலாற்று சான்றுகள் இன்றுமுள்ள வடக்கின் முக்கிய தொல்லியல் முக்கியத்துவம் வாய்ந்த பூநகரி பகுதியே, சுமார் 3000 வருடங்களாக சந்ததி சந்ததியாக மக்கள் வாழும் தமிழர்களின் ஒரே பிரதேசமென வரலாற்றாசிரியர்கள் குறிப்பிட்டுள்ளமையையும் மக்கள் சுட்டிக்காட்டினர்.

எனினும், அரசியல் செல்வாக்கால் தமது வளங்கள் அழிக்கப்பட முயற்சிகள் மேற்கொள்ளப்படுகின்றன என்றும், அந்த காணிகள் தனியாருக்கு வழங்கப்பட்டால் தமது வாழ்வாதாரம் அழிக்கப்படும் என்றும் தெரிவித்தனர்.

தனியாருக்கு வழங்கப்படவுள்ள காணிகளை கொண்ட பகுதியின் ஒரு பகுதி, கடற்றொழிலாளர்களின் பாவனையில் உள்ளது. வள்ளங்களை நிறுத்துவது உள்ளிட்ட மீனவர்களின் அன்றாட நடவடிக்கைக்கு அந்த பகுதி மேற்கொள்ளப்படுகிறது.

அத்துடன் அந்தப் பகுதி மக்களின் கால்நடைகளின் மேய்ச்சல் தரையும் அந்தப் பகுதியிலேயே உள்ளது. குறிப்பிட்ட காணியை தனியாருக்கு வழங்குவதன் மூலம் தமது கால்நடை வளர்ப்பு, மீன்பிடி தொழில்கள் பாதிக்கப்படுமென அந்தப் பகுதி மக்கள் தெரிவித்தனர். சுமார் 200 குடும்பங்கள் அங்கு வசிக்கின்றன.

வீதியின் மறுபக்கத்தில் பெரும் மணல் திட்டுக்கள் காணப்படுகின்றன. அந்தப் பகுதியில் ஹோட்டலோ, பிற கட்டுமானங்களோ மேற்கொள்வதெனில் அந்த மண் கும்பிகளை முதலில் அந்த தனியார் விற்பனை செய்து, அகற்றுவார். இதன்மூலமே மிகப்பெரும் வருமானத்தை தனியார் ஈட்டிக்கொள்வார்.

யாழ்ப்பாணத்தின் அல்லைப்பிட்டி, மண்கும்பான் பகுதிகளில் மணல்திட்டுக்களை அகற்றிய பின்னர்அங்கு குடிதண்ணீர் தட்டுப்பாடு ஏற்பட்டதாக, மக்கள் சுட்டிக்காட்டினர்.

அந்த பகுதி காணியை தனியாருக்கு வழங்குவதில் ஆட்சேபணையில்லையென கிராம மக்கள் கையெழுத்திட்டு தர வேண்டுமென குறிப்பிட்ட தனியார் தமக்கு அழுத்தம் தருகின்றனர் எனவும் மக்கள் சுட்டிக்காட்டினார்.

பூநகரி பகுதியில் இயற்கை வளங்கள் முன்னைய மஹிந்த ராஜபக்ஷவின் ஆட்சியில் அரசியல் செல்வாக்குள்ள தனியார்களுக்கு வழங்கப்பட்டு விட்டன எனவும், சில அரசியல் புள்ளிகள் அங்கு காணிகளைக் கொள்வனவு செய்துள்ளனர் எனவும் பிரதேச மக்கள் தெரிவிக்கின்றனர்.

காணி வழங்கப்படும் இடத்திற்கு அருகாமையிலுள்ள பரமன்கிராய் வெட்டுக்காடுப் பகுதியில் தற்போதைய மேல் மாகாண ஆளுநர் ஏ.ஜே.எம்.முஸம்மில் 50 ஏக்கர் காணியை வாங்கி தென்னந்தோட்டம் உருவாக்கியுள்ளார்.

முன்னாள் கிழக்கு ஆளுநர் ரோஹித போகொல்லாகமவின் மைத்துனர் அஜித் தென்னக்கோன் என்பவர் அங்கு 140 ஏக்கர் காணியை கொள்வனவு செய்து வைத்துள்ளார். அந்த காணியிலுள்ள மணலை விற்பனை செய்ய அவர் மேற்கொண்ட முயற்சி வெற்றியளிக்கவில்லை.

தற்போது கௌதாரிமுனையில் 96 ஏக்கர் அரச காணியை பெற்று ஹோட்டல் கட்ட முயற்சிக்கும் தனியாரான தற்போது ஆஸ்திரேலியாவில் வசிக்கும் நபர் பூநகரியை பூர்வீகமாகக் கொண்டவர்.

தற்போது காணி கோரும் இடத்திற்கு அருகாமையிலேயே வெட்டுக்காடு பகுதியில் அவருக்கு சொந்தமான 100 ஏக்கர் தென்னந்தோப்பு உள்ளது எனவும், அவர் தனது காணியில் ஹோட்டல் கட்டாமல் எதற்காக அரச காணியை பெற முயற்சிக்கிறார் என்றும் மக்கள் கேள்வியெழுப்பினர்.

## சிறிதரன் எம்.பி. கள விஜயம் மக்கள் திரண்டு முறைப்பாடு

பொதுமக்களின் கருத்துக்களை அறிந்த சி.சிறிதரன், பிரதேசசபை உறுப்பினர் ஜெயகாந்தன் தலைமையில் குழுவொன்றை அமைத்து, இது தொடர்பான விஞ்ஞானரீதியான ஆய்வை மேற்கொள்ளவுள்ளதாக தெரிவித்தார். பல்கலைக்கழக மாணவர்கள், துறைசார் நிபுணர்களைக் கொண்ட இந்த குழு, அந்தப் பகுதியில் தனியாருக்கு பெருமளவு நிலம் வழங்குவதால் ஏற்படும் சாதக, பாதகங்களை ஆராய்ந்து அறிக்கை சமர்ப்பிக்கும் என்றும், அடுத்த கட்டமாக இது பற்றி ஆலோசிக்கலாமென்றும் தெரிவித்தார்.

அத்துடன், மக்களின் சுயவிருப்பற்ற நிலையில் அவர்களிடம் யாராவது கையெழுத்து சேகரிக்கும் நடவடிக்கை மேற்கொண்டால், அதற்கு ஒத்துழைப்பு வழங்க வேண்டியதில்லையென்றும் குறிப்பிட்டார்.





யாழ் . பல்கலைக்கழக மாணவர்கள் கடந்த சனிக்கிழமை மயிலிட்டிப் பகுதிகளில் மரநடுகை மேற்கொண்டனர். அடுத்தகட்டமாக முள்ளிவாய்க்கால் மண்ணில் நேற்றுமுன்தினம் 10ஆயிரம் பனைவிதைகள் யாழ் பல்கலைக்கழக மாணவர்களினால் நடப்பட்டன.

இப் பகுதியில் யுத்தம், சுனாமி அனர்த்தங்களினால் அதிகளவு மரங்கள் அழிவடைந்தமை குறிப்பிடத்தக்கது. இவ் மரநடுகை திட்டத்திற்கு கிராம மக்களும் பிரதேச சபையினரும் ஒத்துழைப்பு வழங்கினர்.

வடமாகாணம் முழுவதும் மரநடுகை மேற்கொள்ளவுள்ளதாக பல்கலைக்கழக மாணவர்கள் தெரிவித்தனர்.



சீரடி சமஸ்தானத்தின் அழைப்பில் சென்றிருந்த, சீரடி சாயி மத்தியநிலையம் ஸ்ரீலங்காவின் தலைவர் எஸ். என். உதயநாயகத்திடம், பெருமதிப்புள்ள புனிதமான சக்தி வாய்ந்த சீரடி சாயி பாபாவின் அற்புத மரமான வேப்பமரத்தின் கன்றொன்றை. சீரடி சாயி சமஸ்தானத்தின் அறங்காவலர் பிபின்தாதா சங்கரராவ் கோலே அவர்கள் சீரடி சமஸ்தான சாஸ்திரிகள், உயர் அதிகாரி முன்னிலையில் விஷேட பூஜை செய்து வழங்கினார்.

# கோட்டாவுக்கு ஆதரவாகப் பிரசாரத்தில் களமிறங்கியுள்ள முன்னாள் தளபதிகள்!

கொழும்பு, ஒக். 22

யாழ்ப்பாணத்தில் பொதுஜன பெரமுனவின் ஜனாதிபதி வேட்பாளர் கோட்டாபய ராஜபக் ஷ வின் வெற்றியை உறுதிப்படுத்தும் நடவடிக்கை களுக்காக முன்னாள் படைத் தளபதிகள் களம் இறக்கப்பட்டுள்ளனர்.



கோட்டாபய ராஜபக்ஷ பாதுகாப்புச் செயலராக இருந்த காலகட்டத்தில், இறுதிக்கட்டப் போர் நடந்து கொண்டிருந்த – போருக்குப் பின்னரான காலகட்டத்தில் அவருடன் இணைந்து பணியாற்றிய – யாழ்ப்பாணத்தில் கட்டளைத் தளபதிகளாக இருந்த, இரண்டு மேஜர் ஜெனரல்கள் தேர்தல் நடவடிக்கைகளில் நேரடியாக ஈடுபட்டுள்ளனர்.

மேஜர் ஜெனரல் ஜி.ஏ.சந்திரசிறி மற்றும் மேஜர் ஜெனரல் மஹிந்த ஹத்துருசிங்க ஆகியோரே யாழ்.குடா நாட்டில் கோட்டாபய ராஜபக்ஷவுக்கு ஆதரவு திரட்டும் நடவடிக்கைகளில் இறக்கி விடப்பட்டுள்ளனர்.

இவர்கள் இருவரும், 2005ஆம் ஆண்டுக்கும் 2014ஆம் ஆண்டுக்கும் இடைப்பட்ட காலத்தில், 7 ஆண்டுகள் யாழ்.படைகளின் கட்டளை அதிகாரிகளாகச் செயற்பட்டவர்களாவர்.

அத்துடன், மேஜர் ஜெனரல் ஜி.ஏ. சந்திரசிறி, அதற்குப் பின்னர் வடக்கு மாகாண ஆளுநராகவும் 2015 ஆட்சி மாற்றம் வரை பணியாற்றியிருந்தார்.

யாழ்ப்பாணத்தில் கட்டளைத் தளபதிகளாக இருந்த காலத்தில், கொண்டிருந்த தொடர்புகள், மூலங்களைக் கொண்டு கோட்டாபய ராஜபக்ஷவுக்கு ஆதரவான பரப்புரைகளையும், அவரது வெற்றியை உறுதிப்படுத்துவதற்குத் தேவையான நடவடிக்கைகளையும் இவர்கள் எடுத்து வருகின்றனர்.

மேஜர் ஜெனரல் ஜி.ஏ.சந்திரசிறி பொதுஜன பெரமுனவின் ஏற்பாட்டில் கூட்டங்களை நடத்தி வருகிறார்.

இந்தநிலையில், யாழ்ப்பாணத்துக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ள மேஜர் ஜெனரல் மஹிந்த ஹத்துருசிங்க நேற்று முன்தினம் செய்தியாளர் சந்திப்பு ஒன்றை நடத்தி, கோட்டாபய ராஜபக்ஷவை நாட்டின் ஜனாதிபதியாக்குவதற்கு யாழ்ப்பாண மக்கள் ஒத்துழைக்க வேண்டும் என்று கேட்டுள்ளார். (ஐ)

# பெரமுனவின் தேர்தல் கூட்டங்களில் கலந்துகொள்ள மாட்டாராம் தயாசிறி



கொழும்பு, ஒக். 22

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் ஜனாதிபதி வேட்பாளர் கோட்டாபய ராஜபக்ஷ வின் தேர்தல் பிரசாரக் கூட்டங்களில் கலந்துகொள்ளப் போவதில்லை என ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் பொதுச் செயலாளர் தயாசிறி ஜயசேகர தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதி வேட்பாளர் கோட்டாபயவின் தேர்தல் பிரசாரக் கூட்டங்களில் கலந்துகொள்ளும் சுதந்திரக் கட்சி உறுப்பினர்கள் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் ஆதரவாளர்களினால் அசௌகரியங்களுக்கு உள்ளாகின்றனர் என அவர் குறிப்பிட் டுள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்–

இந்த விடயம் குறித்து அந்தக் கட்சியின் தலைவர் மஹிந்த ராஜபக்ஷ மற்றும் கோட்டாபய ஆகியோரது கவனத்துக்குக் கொண்டு செல்லப்பட்டுள்ளது. எனவே இதற்கான தீர்வு வழங்கப்படும் வரை என்னால் கூட்டங்களில் கலந்து கொள்ள முடியாது.

சுதந்திரக் கட்சியின் தனித்துவத் தன்மையை பாதுகாக்கும் வகையில் பொதுஜன பெரமுனவுடன் நிபந்தனைகளின் அடிப்படையில் ஒப்பந்தத்தின் மூலமாகவே நாம் அவருக்கு ஆதரவளித்துள்ளோம்.

ஆகவே இவ்வாறான அதிருப்தியை ஏற்படுத்தும் செயற்பாடுகள் தவிர்த்துக்கொள்ள வேண்டிய வையாகும் என்பதாலேயே இவ்வாறு அறிவித்துள்ளோம் – என்றார். (ஐ)

# 5 தமிழ்க் கட்சிகளின் ஆவணத்தை கண்டு கதி கலங்கும் ஜனாதிபதி வேட்பாளர்கள்!

கொழும்பு, ஒக். 22

ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடும் வேட்பாளர்களுடன் பேசுவதற்காக ஐந்து தமிழ்க் கட்சிகள் இணைந்து, 13 கோரிக்கைகள் அடங்கிய ஆவணம் ஒன்றைத் தயாரித்துள்ள நிலையில், பிரதான வேட்பாளர்கள் எவரும் பேச்சுக்களை நடத்துவதில் ஆர்வம் காட்டவில்லை என்று தகவல்கள் தெரிவிக்கின்றன.

தமிழ் மக்களின் அபிலாஷைகள், பிரச்சினைகளை உள்ளடக்கிய 13 அம்ச ஆவணத்தை முன்னிறுத்தியே ஜனாதிபதி வேட்பாளர்களுடன் பேசுவோம் என்று ஐந்து தமிழ்க் கட்சிகளும் கூட்டாக அறிவித்திருந்தன.

எனினும், இந்த ஆவணத்துடன் வந்தால் தமிழ்க் கட்சிகளுடன் பேசத் தயாரில்லை என்று பொதுஜன பெரமுனவின் வேட்பாளர் கோட்டாபய ராஜபக்ஷ கூறியிருந்தார்.

அத்துடன், மஹிந்த ராஜபக்ஷவும் தமிழ்க் கட்சிகளின் இந்தக் கோரிக்கைகள் ஆபத்தானவை என்றும், இதனை முன்னிறுத்திப் பேச முடியாது என்றும் தெரிவித்திருந்தார்.

இந்த ஆவணத்துக்கு தென்பகுதியில் உள்ள இனவாதிகள் கடும் எதிர்ப்பை வெளியிட்டு வருகின்றனர். இந்த நிலையில், ஐ.தே.கவின் ஜனாதிபதி வேட்பாளர் சஜித் பிரேமதாஸ இந்த ஆவணத்தை நிராகரிக்காவிடினும், பேச்சு நடத்துவதில் ஆர்வத்தை வெளிப்படுத்தவில்லை.

ஆயினும் அவர் பேச்சு நடத்த தயாராக இருப்பதாகத் தகவல்கள் கூறுகின்றன. எனினும் அவரும் இந்த ஆவணத்தை ஏற்றுக்கொள்ளும் வாய்ப்புகள் இல்லை என்றே கூறப்படுகிறது.

இந்த ஆவணத்தை ஏற்றுக் கொள்ளும் வேட்பாளரைச் சிங்கள மக்கள் ஆதரிக்கக் கூடாது என்று பௌத்த பிக்குகளும், இனவாத அமைப்புகளும் கோரி வரும் நிலையில்– எந்தவொரு ஜனாதிபதி வேட்பாளரும் தமிழ்க் கட்சிகளின் 13 அம்ச ஆவணத்தை ஏற்றுக்கொள்ளும் வாய்ப்புகள் இல்லை என்று கூறப்படுகிறது.

இந்த நிலையில், நேற்று முன் தினம் தமிழரசுக் கட்சியின் தலைவர் மாவை சேனாதிராசா, தமது கோரிக்கைகளை நிராகரித்துள்ள கோட்டாபய ராஜபக்ஷவுடன் பேசத்தயாரில்லை என்று கூறியுள்ளார்.

பிரதான ஜனாதிபதி வேட்பாளர்கள் எவரிடத்தில் இருந்தும் சாதகமான சமிக்ஞைகள் வராத நிலையில், தமிழ்க் கட்சிகளின் அடுத்த கட்ட நடவடிக்கைகள் குறித்து இன்னும் சில நாள்களில் தீர்மானிக்கப்படும் என்று தகவல்கள் தெரிவிக்கின்றன. (ஐ)

# யாழ்ப்பாணத் தமிழ்ச்சங்கம் நடத்திய தனிநாயகம் அடிகள் நினைவரங்கம்







யாழ்ப்பாணம், ஒக். 22

யாழ்ப்பாணத் தமிழ்ச்சங்கம் முன்னெடுத்த தமிழ்த் தூது தனிநாயகம் அடிகள் நினைவரங்கம் நேற்று முன் தினம் யாழ். திருமறைக் கலாமன்ற கலைத்தூது கலையகத்தில் தமிழ்ச்சங்க உபதலைவர் அருட்பணி ஜெறோ செல்வநாயகம் தலைமையில் நடைபெற்றது.

நிகழ்வில் தனியாகம் அடிகளின் உருவச்சிலைக்கு அருட்பணி ஜெறோ அடிகளாரும் தமிழ்ச்சங்கத் தலைவர் ச.லலீசனும் மலர் மாலை அணிவித்தனர். சியன தேசிய கல்வியியற் கல்லூரி விரிவுரையாளர் சி. கேசவன் நினைவுப் பேருரையாற்றினார். தமிழ்ச் சங்கம் நடத்திய விவாதப் போட்டிக்கான இறுதிப் போட்டியும் நடைபெற்றது. (ஐ)

# இளம் வீரர்கள் சிறப்பாக ஆடியதால் கடும் அழுத்தத்தில் சிரேஷ்ட வீரர்கள்

## ஏற்றுக்கொண்டார் திசர பெரேரா



பாகிஸ்தானில் இலங்கையின் அனுபவமற்ற அணியின் ரி -20 வெற்றியைப் பாராட்டியுள்ள சகல துறைவீரர் திசர பெரேரா, இளம் வீரர்கள் சிறப்பாக விளையாடியுள்ளமை தன்னைப் போன்ற சிரேஷ்ட வீரர்களுக்கு அழுத்தத்தை உருவாக்கியுள்ளது என்பதையும் ஏற்றுக் கொண்டுள்ளார்.

இலங்கையின் அணியின் ஒவ்வொரு சிரேஷ்ட வீரரும் அழுத்தத்தை எதிர்கொள்ளுவர் எனத் தெரிவித்துள்ள அவர் இது இலங்கை கிரிக்கெட்டுக்கு சிறந்த விடயம் எனவும் தெரிவித்துள்ளார்.

பாகிஸ்தானுக்கு எதிரான ரி – 20 வெற்றி இலங்கையின் திறமையின் அளவை வெளிப்படுத்தியுள்ளது எனக் குறிப்பிட்டுள்ள அவர், சக இளம்வீரர்கள் குறித்து பெருமிதம் அடைகிறார் எனவும் கூறினார்.

ஓர் இலங்கையன் என்ற அடிப்படையில் நான் அவர்களின் வெற்றி குறித்து பெருமைப்படுகின்றேன், இளம் அணி ரி20 தரவரிசையில் முதலாவதாக உள்ள அணியை தோற்கடித்துள்ளது, பல வீரர்கள் பாகிஸ்தான் செல்ல மறுத்ததன் காரணமாக இளம் வீரர்களுக்கு வாய்ப்பு கிடைத்தது. அவர்கள் அந்த வாய்ப்பை மிகச் சிறப்பாக பயன்படுத்தினார்கள் எனவும் திசர பெரேரா கூறினார்.

ஹசரங்கவும் பானுக்கவும் நிச்சயமாக எதிர்கால நட்சத்திரங்கள் என தெரிவித்துள்ள திசர பெரேரா, அவர்கள் தங்களுக்குக் கிடைத்த வாய்ப்பை பயன்படுத்தினர் எனவும் குறிப்பிட்டார். (ஐ)

# 'த ஹன்ரட்' தொடரில் பங்கேற்கும் வீரர்களின் விவரம் வெளியானது

இங்கிலாந்து கிரிக்கெட் சபையால் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள 100 பந்துகள் கொண்ட 'த ஹன்ரட்' கிரிக்கெட் தொடருக்கான வீரர்களின் தெரிவு, இறுதி செய்யப்பட்டுள்ளது.

'த ஹன்ரட்' தொடரில் பங்கேற்க 165 வீரர்கள் விண்ணப்பித்திருந்த நிலையில், இத்தொடரில் விளையாடப் போகும் எட்டு அணிகள் தங்களது வீரர்களைத் தெரிவு செய்துள்ளன.

இதில் 125,000, 100,000, 75,000, 60,000, 40,000 பவுண்ஸ்கள் விலைக்கு வீரர்கள் விலை போயுள்ளனர்.

இதன்படி, கிறிஸ் கெய்ல், லசித் மலிங்க, கார்கிஸோ ரபாடா, ஸ்டீவ் ஸமித், மிட்செல் ஸ்டாக், டேவிட் வோர்னர் ஆகியோர் அதிகபட்சமாக 125,000 பவுண்ஸ்கள் விலைக்கு போயுள்ளனர்.

இதில் அணியொன்றில் மூன்று வெளிநாட்டு வீரர்கள் மற்றும் இரண்டு உள்ளூர் வீரர்கள் அணியில் இடம் பெற்றுள்ளனர்.

இலங்கை, பாகிஸ்தான், மேற்கிந்திய தீவுகள், ஆஸ்திரேலியா, தென்னாபிரிக்கா, பங்களாதேஷ், நேபால், ஆகிய நாடுகளைக் கொண்ட வீரர்கள் பங்கேற்கும் இத் தொடரில், பிளே ஓவ் சுற்றுக்கு முன்னதாக 38 நாள்களில் 32 போட்டிகள் நடைபெறவுள்ளன.

ட்ரென்ட் ரொக்கேட்ஸ், சவுத்தன் பிரேவ், வெல்ஸ் பையர், ஓவல் இன்விஸிபல்ஸ், மன்செஸ்டர் ஒரிஜினல்ஸ், லண்டன் ஸ்பிரிட், பர்மிங்ஹாம் பொனிக்ஸ் ஆகிய அணிகள் இத்தொடரில் பங்கேற்கின்றன.

ஆண்கள் மற்றும் பெண்கள் என பங்கேற்கும் இத்தொடர், எதிர்வரும் 2020ஆம் ஆண்டு ஜூலை மாதத்தில் நடைபெறவுள்ளது. இத்தொடரில், இங்கிலாந்தின் பிராந்தியங்களைச் சேர்ந்த எட்டு அணிகள் பங்கேற்று விளையாடவுள்ளன.

இந்த த ஹன்ரட் கிரிக்கெட் தொடரில் 6 பந்துகள் கொண்ட 15 ஓவர்களும் 10 பந்துகள் கொண்ட ஒரு ஓவரும் வீசப்படும் என முன்னர்




கூறப்பட்ட போதும் இந்த ஆண்டு அதில் சில மாற்றங்கள் இடம்பெற்றிருக்கின்றன என இங்கிலாந்து கிரிக்கெட் சபை தெரிவித்திருந்தது.

அந்தவகையில் இந்த கிரிக்கெட் தொடரில் 10 பந்துகள் கொண்ட 10 ஓவர்கள் வீசப்படவுள்ளதோடு, குறிப்பிட்ட ஒவ்வொரு ஓவரினதும் 10 பந்துகளையோ அல்லது 5 பந்துகளையோ பந்துவீச்சாளர் ஒருவருக்கு வீச முடியும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதுதவிர, இந்த கிரிக்கெட் தொடரில் இன்னும் சில புதிய விதிமுறைகளும் அறிமுகப்படுத்தப்படவுள்ளன. இத் தொடர் நெருங்கும் போது இதற்கான அறிவிப்பு வெளியாகும் எனக் கூறப்படுகின்றது.



# 14 வருட காதலியை கரம்பிடித்தார் நடால்



பிரபல ரென்னிஸ் வீரர் ரபேல் நடால், தனது 14 வருடக் காதலி மேரி பெரெல்லாவை திருமணம் செய்துகொண்டார்.

பிரபல ரென்னிஸ் வீரர் ரபேல் நடால். ஸ்பெயினை சேர்ந்த இவர், 19 கிராண்ட்ஸ்லாம் பட்டங்களை வென்றுள்ளார்.

இவர் மேரி பெரேல்லா என்ற தனது பாடசாலைத் தோழியைக் காதலித்து வந்தார். நடால் கலந்து கொள்ளும் போட்டிகளுக்கு வந்து, அவரை உற்சாகப்படுத்துவதை வழக்கமாகக் கொண்டிருந்தார் மேரி பெரேல்லா.

இந்நிலையில் இவர்கள் திருமண நிச்சயதார்த்தம் கடந்த வருடம் மே மாதம் நடந்ததாகக் கூறப்பட்டது. இந் நிலையில் இவர்கள் திருமணம் கடந்த வெள்ளி நடந்தது.

ஸ்பெயினில் நடந்த இந்த திருமணத்தில் பிரபல ரென்னிஸ் வீரர்கள், வீராங்கனைகள் உட்பட சுமார் 350 விருந்தினர்கள் கலந்துகொண்டு மணமக்களை வாழ்த்தினர்.

# மீள்வருகையின் பின் அன்டி முர்ரே அசத்தல்

ரென்னிஸ் இரசிகர்களை உச்ச விறுவிறுப்பில் ஆழ்த்தி வந்த, ஆண்களுக்கே உரித்தான ஐரோப்பியன் பகிரங்க ரென்னிஸ் தொடர் நிறைவு பெற்றுள்ளது.

எதிர்பார்ப்புக்கு மத்தியில் நேற்று முன் தினம் நடைபெற்ற ஆண்களுக்கான ஒற்றையர் பிரிவு இறுதிப் போட்டியில், பிரித்தானியாவின் அன்டி முர்ரேயும், சுவிஸ்லாந்தின் ஸ்டென் வாவ்ரிக்காவும் பலப்பரீட்சை நடத்தினர்.

விறுவிறுப்பாக நடைபெற்ற இப்போட்டியில், முதல் செற்றை 6 – 3 என ஸ்டென் வாவ்ரிக்கா கைப்பற்றினார்.

இதனைத் தொடர்ந்து, நடைபெற்ற இரண்டாவது செற்றில் மீண்டெழுந்து ஆக்ரோஷமாக விளையாடிய அன்டி முர்ரே செற்றை 6 – 4 எனக் கைப்பற்றி பதிலடி கொடுத்தார்.

இருவரும் தலா ஒரு செற்றைக் கைப்பற்றியமையால் வெற்றியை தீர்மானிக்கும் மூன்றாவது செற் பரபரப்படைந்தது.

இதில் ஆக்ரோஷம் கலந்த நிதானத்துடன் விளையாடிய அன்டி முர்ரே, செட்டை 6 – 4 எனக் கைப்பற்றி சம்பியன் பட்டத்தை வென்றார்.



இதன்மூலம், கடந்த 2016ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட ஐரோப்பியன் பகிரங்க ரென்னிஸ் தொடரில் நான்காவது சம்பியன் பட்டத்தைவென்ற இரண்டாவது பிரித்தானிய வீரர் என்ற பெருமையைஅன்டிமுர்ரே பெற்றார்.

இடுப்பு வலி காரணமாக சர்வதேச ரென்னிஸ் போட்டிகளிலிருந்து ஓய்வுப் பெற்ற அன்டி முர்ரே, மீண்டும் ஓய்வு அறிவிப்பை மீளப் பெற்று ரென்னிஸ் களத்திற்கு புகுந்த பின்னர் பெற்றுக் கொண்ட முதல் சம்பியன் பட்டம் இதுவாகும்.

கடந்த 2017ஆம் ஆண்டுக்கு பின் முதன்முறையாக ஏ.டி.பி. போட்டித்தொடரொன்றின் இறுதிப் போட்டிக்கு முன்னேறிய முர்ரே, வெற்றிக்கொள்ளும் 46ஆவது சம்பியன் பட்டம் இதுவாகும். 32 வயதான அன்டி முர்ரே, இதுவரை மூன்று கிராண்ட்ஸ்லாம் பட்டங்களை வென்றுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

# ஜப்பான் பயணமானார் மைத்திரி



கொழும்பு, ஒக். 22

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன மூன்று நாள்கள் உத்தியோகபூர்வ விஜயம் மேற்கொண்டு ஜப்பானுக்குப் பயணமாகியுள்ளார்.

அவர் நேற்று அதிகாலை ஜப்பான் நோக்கி பயணித்தார். ஜனாதிபதியுடன் 20 பேர் கொண்ட குழுவினர் கட்டுநாயக்க விமான நிலையத்திலிருந்து ஜப்பானுக்குப் பயணித்தனர்.

இன்று நடைபெறவுள்ள ஜப்பான் பேரரசர் நருஹிடோவின் முடிசூட்டு விழாவில் கலந்துகொள்வதற்காகவே ஜனாதிபதி இந்த விஜயத்தை மேற்கொண்டுள்ளார். முடிசூட்டு விழாவில் கலந்துகொள்ளுமாறு பிரிட்டன் இளவரசர் சார்ள்ஸ், சவூதியின் முடிக்குரிய இளவரசர் முஹம்மது பின் சல்மான் உள்ளிட்டோருக்கும் அழைப்பு விடுக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## ஜனாதிபதித் தேர்தலில் இராணுவம் நடுநிலையாகச் செயற்படவேண்டும்

### தேர்தல்கள் ஆணைக்குழு வலியுறுத்தல்

கொழும்பு, ஒக். 22

அடுத்தமாதம் நடைபெறவுள்ள ஜனாதிபதித் தேர்தலில் இலங்கை இராணுவம் நடுநிலையாகச் செயற்படவேண்டும் என்று தேர்தல்கள் ஆணைக்குழு கோரியுள்ளது.

ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடும் கோட்டாபய ராஜபக்ஷவுக்கு ஆதரவாக, இலங்கை இராணுவத் தளபதியின் படம் மற்றும் கருத்துக்களுடன் தேர்தல் விளம்பரங்கள் வெளியிடப்பட்டதை அடுத்தே தேர்தல்கள் ஆணைக்குழு இவ்வாறு கூறியுள்ளது.

தனது பழைய படம் மற்றும் கருத்துக்கள், தனக்குத் தெரியாமல் தேர்தல் விளம்பரங்களுக்குப் பயன்படுத்தப்பட்டுள்ளன என இலங்கை இராணுவத் தளபதி லெப்.ஜெனரல் சவேந்திர சில்வா விளக்கம் அளித்திருந்தார்.

இது குறித்து கருத்து வெளியிட்ட தேர்தல்கள் ஆணைக்குழுவின் தலைவர் மஹிந்த தேசப்பிரிய, இந்தத் தேர்தலில் எந்த வேட்பாளரையும் தாங்கள் ஆதரிக்கவில்லை என்று இராணுவத் தளபதி உறுதியளித்துள்ளார் என்று கூறினார்.

எனவே, கடந்த காலங்களைப் போல நடுநிலையாக இருப்பதன் மூலம் இந்தத் தேர்தலை நடத்துவதற்குத் தேர்தல் ஆணைக்குழுவுக்கு இலங்கை இராணுவம் உதவும் என்று நாங்கள் நம்புகிறோம் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

இதற்கிடையே, இலங்கை இராணுவத் தளபதி லெப்.ஜெனரல் சவேந்திர சில்வாவின் ஒளிப்படம் மற்றும் அவர் வெளியிட்டிருந்த கருத்துக்கள் என்பனவற்றை ஜனாதிபதித் தேர்தல் பரப்புரை விளம்பரத்துக்குப் பயன்படுத்தப்பட்டதற்கு எதிராகச் சட்ட நடவடிக்கை எடுக்கும் திட்டம் ஏதும் கிடையாது என்று இலங்கை இராணுவம் தெரிவித்துள்ளது.

இது குறித்து கருத்து வெளியிட்ட இராணுவப் பேச்சாளர் மேஜர் ஜெனரல் சுமித் அத்தபத்து, இந்தத் நேரத்தில் விளம்பரம் தொடர்பாக சட்ட நடவடிக்கை எடுக்க இராணுவம் திட்டமிடவில்லை. இந்த விடயத்தை பாதுகாப்பு அமைச்சும் தேர்தல்கள் ஆணைக்குழுவுமே கையாளவேண்டும் என்றும் அவர் கூறியுள்ளார். (ஐ)

# பாதாள உலகக் குழுவை முழுமையாக ஒழிப்பேன்!

### கோட்டாபய ராஜபக்ஷ உறுதி



கொழும்பு, ஒக். 22

ஜனாதிபதியாக தான் ஆட்சிப் பீடத்தைக் கைப்பற்றியவுடன், பாதாள உலகக் குழுவினரை முழுமையாக இல்லாது செய்வதாக ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் ஜனாதிபதி வேட்பாளர் கோட்டாபய ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

வெலிகம பிரதேசத்தில் இடம்பெற்ற பிரசாரக் கூட்டத்திலேயே அவர் இவ்வாறு கூறியுள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

நான் தற்போது இங்கு வரும்போது மக்களைச் சந்தித்தேன். இவர்கள் அனைவரும் பாதுகாப்பான நாடொன்றை வழங்குமாறுதான் எம்மிடம் கோரிக்கை விடுக்கிறார்கள்.

யுத்தத்தை நாம் நிறைவு செய்த பின்னர், தீவிரவாதம் மற்றும் அடிப்படைவாத அமைப்புக்களைக் கண்காணிக்க விசேட குழுக்களை நியமித்திருந்தோம். இதற்காக அதிகாரிகளுக்குச் சிறப்புப் பயிற்சிகளையும் வழங்கியிருந்தோம்.

எனினும், இந்த அரசு ஆட்சிக்கு வந்த பின்னர் நாட்டின் தேசியப் பாதுகாப்பு கேள்விக்குட்படுத்தப்பட்டுள்ளது.

தேசிய பாதுகாப்பு தொடர்பாக எந்தவொரு தெளிவுப்படுத்தலும் இவர்களுக்குக் கிடையாது. இதன் பலனைத்தான் நாம் ஈஸ்டர் தினத்தன்று தெரிந்துகொண்டோம்.

நாம் இலங்கையில் ஆட்சியைக் கைப்பற்றியவுடன் மீண்டும் நாட்டின் பாதுகாப்பைப் பலப்படுத்துவோம்.

அன்று நாம் பாதாள உலகக் குழுக்கள், போதைப் பொருள் வர்த்தகங்களை இல்லாது செய்திருந்தோம். இந்தச் செயற்பாட்டையும் நாம் மீண்டும் ஆரம்பிப்போம்.

எமது நாடு தற்போது அனைத்துத் துறைகளிலும் வீழ்ச்சியடைந்துள்ளது. எம்மைப் பொறுத்தவரை நாட்டை மீண்டும் பலப்படுத்த வேண்டும் என்பதுதான் எமது பிரதான நோக்கமாகும் – என்றார். (ஐ)

# மலரவுள்ள புதிய ஆட்சியில் தமிழ் மக்களின் பிரச்சினைகளுக்கான தீர்வுக்கு உழைப்பேன்!

### டக்ளஸ் எம்.பி. தெரிவிப்பு



யாழ்ப்பாணம், ஒக். 22

பொதுஜன பெரமுன கட்சியின் சார்பில் ஜனாதிபதி வேட்பாளராக போட்டியிடும் கோட்டாபய ராஜபக்ஷவின் வெற்றியை உறுதி செய்வீர்களானால் நிச்சயம் என்னால் தீர்வுகளை பெற்றுத்தர முடியும் என ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின் செயலாளர் நாயகம் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்துள்ளார்.

பளை இத்தாவில் பகுதியில் நடைபெற்ற மக்கள் சந்திப்பின்போதே அவர் இவ்வாறு கூறினார்

அவர் மேலும் தெரிவிக்கையில் –

நாம் நிச்சயம் மீண்டும் ஆட்சி அதிகாரங்களுக்கு வருவோம். அந்த சந்தர்ப்பத்தை பயன்படுத்தி தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினரால் தட்டிக்கழிக்கப்பட்டு வரும் எமது மக்களின் தீராப் பிரச்சினைகளுக்கு தீர்வு கண்டு கொடுத்து நிம்மதியான வாழ்வுக்கும் வழிவகை செய்வோம்.

தற்போது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் மக்களை ஏமாற்ற புதிய வழிமுறைகளைத் தேடிக் கொண்டிருக்கின்றனர். இதற்காக புதுப் புது ஐக்கியங்களை உருவாக்கி வருகின்றனர். ஆனாலும் இவர்களது ஏமாற்று வித்தைகளை மக்கள் இன்று புரிந்து கொண்டுள்ளனர்.

மக்களுக்கு உண்மையிலேயே நிரந்தரமான தீர்வைப் பெற்றுக் கொடுக்க தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் முயற்சித்திருந்தால் அவர்கள் உருவாக்கிய இந்த நல்லாட்சில் அதைச் செய்திருக்கலாம். அல்லது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் சொல்வதுபோல் அரசு ஏமாற்றுகின்றது என்று கூறினால் அரசுக்கு எதிராக ஆட்சி அமைத்து முதலாவது பாதீட்டிலேயே நம்பிக்கை இல்லாப் பிரேரணையை கொண்டுவந்திருக்கலாம். ஆனால் இவற்றை அவர்கள் செய்யவில்லை.

மாறாக எதிர்க்கட்சித் தரப்பினர் கொண்டுவந்த நம்பிக்கையில்லாப் பிரேரணையைக் கூட அவர்கள் ஆதரித்து அரசுக்கு முண்டு கொடுத்து காப்பாற்றியிருந்தனர். ஆனால் இன்று தேர்தல் வந்தவுடன் அரசு மீது குற்றம் சுமத்துகின்றனர்.

ஆனால் அன்று இந்த அரசு ஏமாற்றுகிறது என்று கூறி நம்பிக்கையில்லப் பிரேரணை கொண்டுவந்திருந்தால் இன்று நீராவியடி பிள்ளையார் ஆலயப் பிரச்சினையோ அன்றி கன்னியா பிரச்சினையோ கல்முனை விவகாரமோ உருவாகியிருக்காது. இதேபோலத் தான் காணாமலாக்கப்பட்டோர் விடயமும் உள்ளது.

அதனால் தான் நான் மக்களிடம் கூறிவருகின்றேன், எங்களை நம்புங்கள் நாம் கூறும் வழிமுறையை நோக்கி அணிதிரளுங்கள் என்று.

எமது கரங்களுக்கு தமிழ் மக்களின் அரசியல் அதிகாரங்கள் கிடைக்குமேயானால் அடுத்த ஆட்சிக் காலத்திற்குள் தமிழ் மக்களது அதிகளவான பிரச்சினைகளுக்கு நிரந்தர தீர்வுகளைப் பெற்றுக் கொடுக்க எம்மால் முடியும். அதை நாம் செய்வோம். செய்விப்போம் – என்றார். (ஐ)

காலைக்கதிர் KalaiKathir



# கோட்டா வென்றால் இலங்கை பர்மாவைப் போன்றே மாறும்

## ரிஷாத் பதியுதீன் எச்சரிக்கை



கொழும்பு, ஒக். 22

கோட்டாபய ராஜபக்ஷ ஜனாதிபதியாக வந்தால் முஸ்லிம்களின் பாதுகாப்பு கேள்விக்குறியாவதுடன் பர்மாவைப் போன்று இலங்கையும் மாறிவிடும் என அகில இலங்கை மக்கள் காங்கிரஸின் தலைவரும் அமைச்சருமான ரிஷாத் பதியுதீன் தெரிவித்தார்.

புதிய ஜனநாயக முன்னணி ஜனாதிபதி வேட்பாளர் அமைச்சர் சஜித் பிரேமதாஸவை ஆதரித்து நாடாளுமன்ற உறுப்பினர் பேராசிரியர் எஸ்.எம்.எம்.இஸ்மாயிலின் அழைப்பில் அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் ஏற்பாடு செய்த மாபெரும் தேர்தல் பிரசாரக் கூட்டம் சம்மாந்துறை விளினையடிச் சந்தி அருகாமையில் நேற்று முன்தினம் இரவு நடைபெற்றது. இதில் உரையாற்றியபோதே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

நாங்கள் எதிர்நோக்க இருக்கின்ற இந்த ஜனாதிபதித் தேர்தல் முக்கியமான இரு வேட்பாளர்களான புதிய ஜனநாயக முன்னணியின் வேட்பாளர் சஜித் பிரேமதாஸ மற்றும் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் வேட்பாளர் கோட்டாபய ராஜபக்ஷ ஆகிய இருவரில் ஒருவரை ஜனாதிபதியாகத் தெரிவு செய்யும் வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த தேர்தலாகும். இதில் இனவாதங்களைக் களையெடுக்கக்கூடிய குறிப்பாக முஸ்லிம் மக்களது பாதுகாப்பை உறுதிப்படுத்தக்கூடிய வேட்பாளரான சஜித் பிரேமதாஸவையே ஆதரிக்க வேண்டும்.

இங்கு நாம் முஸ்லிம் பிரதிநிதிகளிடம் காணப்படுகின்ற வெறுப்புக்களை மறந்து முஸ்லிம் சமூகத்தின் பாதுகாப்புக்காக ஒன்று திரளவேண்டிய நிலையில் காணப்படுகின்றோம். கோட்டாபய ஜனாதிபதியாக வந்தால் முஸ்லிம் சமூகம் அச்சத்துடன் வாழக்கூடிய சூழ்நிலை உருவாகிவிடும். இலங்கையில் உள்ள முஸ்லிம்களின் பாதுகாப்பு கேள்விக்குறி ஆவதுடன் பர்மாவைப் போன்று இலங்கையும் மாறிவிடும்.

இன்று பணத்துக்காகவும் பயத்தினாலும் பல முஸ்லிம் அரசியல் பிரமுகர்கள் கோட்டாபய ராஜபக்ஷவை ஆதரிக்கும் நிலையைக் காணலாம். கடந்த ஏப்ரல் 21 இடம்பெற்ற பயங்கரவாதத் தாக்குதலைத் தொடர்ந்து என் மீது பல குற்றச்சாட்டுக்களைச் சுமத்தி, என்னையும் அந்தப் பயங்கரவாதத் தாக்குதலுடன் தொடர்புபடுத்தி இந்தப் பேரினவாத சக்திகள் என் மீது அபாண்டமாகப் பழிசுமத்தி கைது செய்யுமாறு கோரின. இதனையடுத்து என் மீது சுமத்தப்பட்ட குற்றங்கள் அனைத்தும் போலியானவை என நீதிமன்றம் தீர்ப்பளித்தது. எங்கள் சமுதாயத்துக்காக எங்கள் தலைகளையும் அர்ப்பணம் செய்ய நாங்கள் தயாராக உள்ளோம் .

ஜனாதிபதியாகத் தன்னைத் தெரிவு செய்யுமாறு கூறும் வேட்பாளர் முன்னாள் கிழக்கு மாகாண ஆளுநர் எம்.எல்.எம்.ஹிஸ்புல்லாஹ் முஸ்லிம் மக்களது வாக்குகளை வீணாக்கி பொதுஜன பெரமுனவின் வேட்பாளர் கோட்டாபயவை வெற்றி பெறச்செய்யும் நடவடிக்கைகளில் களம் இறங்கியுள்ளார். அவரது வார்த்தைகளை நம்பி நாம் ஒருபோதும் ஏமாந்துவிடக் கூடாது.

அத்துடன் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் தலைவர் அமைச்சர் ரவூப் ஹக்கீம் எப்போதோ பேசிய காணொலியை இப்போது வெளியிட்டு இந்த அநாகரிகமான செயலைச் செய்தமையானது எங்களது கட்சி வன்மையாகக் கண்டிக்கின்றது.

அத்துடன் இந்த விடயம் தொடர்பில் அமைச்சர் ரவூப் ஹக்கீமுக்கு எந்த ஒரு பிரச்சினை வருவதற்கும் நாங்கள் ஒருபோதும் அனுமதிக்க மாட்டோம். இங்கு சமுதாயத்தைப் பாதுகாப்பதற்காக எல்லோரும் ஒன்று சேர்ந்து பயணிக்க வேண்டும். இது நாடாளுமன்றத் தேர்தலோ மாகாண சபைத் தேர்தலோ உள்ளூராட்சி மன்றத் தேர்தலோ அல்ல. மாறாக இது நாட்டின் தலைமையைத் தீர்மானிக்கும் தேர்தல் ஆகவே மக்களாகிய நீங்கள் தான் எமது சமூகத்தின் பாதுகாப்புக்கு ஏற்ற நாட்டின் தலைமையான சஜித் பிரேமதாஸவை ஆதரிக்க வேண்டும் – என்றார். (ஐ)

# மஹிந்த மீள ஆட்சிக்கு வந்தால் நாடு வறுமைக்குள் தள்ளப்படும்

## கிழக்கின் முன்னாள் ஆளுநர் எச்சரிக்கை



கொழும்பு, ஒக். 22

மஹிந்த ராஜபக்ஷ மீண்டும் ஆட்சிக்கு வந்தால் நாடு வறுமைக்குள் தள்ளப்படும் ஆபத்து உள்ளதாக முன்னாள் கிழக்கு மாகாண ஆளுநரும் முன்னாள் வெளிவிவகார அமைச்சருமான ரோகித போகொல்லாகம எச்சரித்துள்ளார்.

ஐக்கிய தேசியக் கட்சியின் ஜனாதிபதி வேட்பாளர் சஜித் பிரேமதாஸவை ஆதரிக்கும் மட்டக்களப்பு மாவட்ட தமிழ் பிரதேசத்துக்கான முதலாவது கூட்டம் நேற்றுமுன்தினம் மாலை மட்டக்களப்பு கிரான்குளத்தில் நடைபெற்றது.

கிரான்குளத்தில் உள்ள தனியார் விடுதியில் சஜித் பிரேமதாஸ ஜெனரேசன் அமைப்பின் ஏற்பாட்டில் இந்தக் கூட்டம் நடைபெற்றது.

இங்குஉரையாற்றிய சஜித், கடந்த காலத்தில் கடத்தல்கள், காணாமல்போதல்கள், வெள்ளை வான் கலாசாரங்களை தமிழ் மக்கள் மறந்திருக்க மாட்டார்கள். இந்த நிலைமை மீண்டும் ஏற்படுவதற்கு நாங்கள் அனுமதிக்க முடியாது. நாங்கள் சஜித் பிரேமதாஸவுக்கு வாக்களிக்காவிட்டால் மீண்டும் அந்த யுகம் ஏற்படுவதைத் தடுக்க முடியாமல்போகும்.

மஹிந்த ஆட்சிக்காலத்தில் இந்த நாட்டின் வளங்கள் சூறையாடப்பட்டதுடன் திறைசேரியும் வெறுமையாக்கப்பட்டது. ஐக்கிய தேசியக் கட்சி ஆட்சிக்கு வந்தபோதே இந்த நிலை மாற்றப்பட்டது. மீண்டும் அந்த ஆட்சி யேற்படுமானால் இந்த நாடு மீண்டும் வறுமை நிலைக்குள் தள்ளப்படும் ஆபத்து காணப்படுகின்றது. அந்த நிலையேற்படுவதற்கு அனுமதிக்கக் கூடாது.

இந்த நாட்டின் வளங்களைச் சூறையாடுபவர்கள் தேவையில்லை. கொள்ளையர்கள் தேவையில்லை. இந்த நாட்டு மக்கள் அனைவரையும் ஒன்றாக நேசிக்கக்கூடிய, நேர்மையான முறையில் செயற்படக்கூடிய தலைவர் ஒருவரே தேவை. அந்த தலைமைத்துவமே இன்று சஜித் பிரேமதாஸ என்பதை மக்கள் உணர்ந்துள்ளனர் – என்றார். (ஐ)

# கல்முனை தமிழ், முஸ்லிம்களை பிரித்து ஹக்கீம் – சம்பந்தன் குளிர்காயத் திட்டம்!

## உலமாக் கட்சியின் தலைவர் சாடல்

கல்முனை தமிழ் முஸ்லிம்களை பிரித்து மக்களுக்கு மத்தியில் பிரச்சினைகளை ஏற்படுத்தி ரவூப் ஹக்கீம் மற்றும் சம்பந்தன் ஆகியோர் குளிர்காய முனைகின்றனர் என முஸ்லிம் உலமாக் கட்சியின் தலைவர் முபாரக் அப்துல் மஜீத் மௌலவி தெரிவித்தார்.

ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுனவை ஆதரித்து முஸ்லிம் உலமாக் கட்சியின் தலைவரது அலுவலகத்தில் ஊடகவியலாளர் சந்திப்பொன்று நேற்றுமுன்தினம் இரவு 9 மணியளவில் நடைபெற்றது. இதன்போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் முஸ்லிம் மக்கள் குறிப்பாகக் கிழக்கு முஸ்லிம் மக்கள் பொதுஜன பெரமுனவின் ஜனாதிபதி வேட்பாளர் கோட்டாபய ராஜபக்ஷவை ஆதரிக்க உள்ளனர்.

எனினும் எந்தவிதமான உடன்படிக்கைகளும் இல்லாமல் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் மற்றும் அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் ஆகிய இரு பெரும் முஸ்லிம் கட்சிகள் ஐக்கிய தேசியக் கட்சியின் ஜனாதிபதி வேட்பாளரான சஜித் பிரேமதாஸவை ஆதரிக்கின்றது. இந்தச் செயற்பாட்டை இரு கட்சித் தலைவர்கள் எமது மக்களை அடிமைகளாக வைத்திருப்பது செயற்படுவது போன்ற செயற்பாடாகவே பார்க்கின்றேன். குறிப்பாக ஐக்கிய தேசியக் கட்சியின் ஆட்சிக்காலங்களிலே பெரும் ஆபத்துக்களை இந்த முஸ்லிம் சமூகம் எதிர்நோக்கியுள்ளது. குறிப்பாக 2001 இல் ஏற்பட்ட ஐக்கிய தேசியக் கட்சியின் ஆட்சிக்காலமானாலும் சரி இன்றைய ஆட்சியானாலும் சரி முஸ்லிம் மக்கள் பெருமளவு பாதிக்கப்பட்டுள்ளனர். இன்றைய சூழ்நிலையில் முஸ்லிம் மக்களுக்கு எதிராகக் கட்டவிழ்த்து விடப்பட்ட அனைத்துப் பிரச்சினைகளுக்கும் தாங்கள் பொறுப்பல்ல என்றும், அனைத்துக்கும் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவே பொறுப்புக் கூறவேண்டும் எனவும் நழுவுகின்ற ஆட்சியாகவே காணப்படுகின்றது

முஸ்லிம் மக்கள் சார்பாக ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடுகின்ற முன்னாள் கிழக்கு மாகாண ஆளுநர் எம்.எல்.எம். ஹிஸ்புல்லாவை அமைச்சர் ரவூப் ஹக்கீம் விமர்சிப்பதென்பது சிறுபிள்ளைத்தனமானது. தேர்தலில் போட்டியிடுவதென்பது அவரவர் உரிமை. இதில் யாரும் தலையிட முடியாது. இருந்த போதிலும் அமைச்சர் ரவூப் ஹக்கீம் எதற்காக முன்னாள் ஆளுநர் ஹிஸ்புல்லாவை கண்டு பயப்படுகின்றார் என்று தெரியவில்லை. ஆனால் பயப்படுகின்றார் என்று நன்றாகத் தெரிகின்றது. தேர்தல்கள் வரும் போது தான் அமைச்சர் ரவூப் ஹக்கீமுக்கு ஞானம் பிறக்கின்றது. பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவின் ஆட்சியில் நான்கரை வருடம் அமைச்சராக இருந்த ரவூப் ஹக்கீம் நினைத்திருந்தால் கல்முனைப் பிரச்சினைக்கு ஒரு நாளில் தீர்வை பெற்றுத்தந்திருக்க முடியும்.

ஆனால் அவர் இந்த கல்முனை பிரச்சினையை பிச்சைக்காரனது புண் போன்று காட்டியே அரசியல் செய்கின்றார். கல்முனை முஸ்லிம் மக்கள் சகோதர தமிழ் மக்களுடன் ஒன்றாக வாழ வேண்டும். தென் மாகாணத்தைப் பொறுத்த மட்டில் முஸ்லிம்கள் அனைவருடனும் சகோதரத்துவத்துடன் பழகும் போது ஏன் கல்முனை முஸ்லிம்களை பிரித்து பார்க்க வைக்கின்றனர் இந்த அரசியல்வாதிகள். மீண்டும் அன்னத்திற்கு வாக்களிக்க வைத்து தமிழ் முஸ்லிம் மக்களுக்கு மத்தியில் பிரச்சினைகளை உண்டுபண்ணி ரவூப் ஹக்கீம் மற்றும் சம்பந்தன் ஆகியோர் குளிர்காய முனைகின்றனர் – என்றார்.

(ஐ)

இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள காலைக்கதிர் பிறஸ் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 22.10.2019 இல் வெளியிடப்பெற்றது.

## பிரபாகரனை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வைத்துள்ளன. நாட்டைப் பிளவுப் படுத்தும் விடயங்களுக்கு மாற்றுக் கருத்துக்கள் ஏதும் இன்றி மறுப்பு தெரிவித்துள்ளோம் என நாட்டு மக்களுக்குப் பகிரங்கப் படுத்தவேண்டும் என்று நாடாளுமன்ற உறுப்பினர் ரோஹித் அபேகுணவர்தன தெரிவித்தார்.

பொதுஜன பெரமுனவின் தலைமைகாரியாலயத்தில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்துரைக்கையில் அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

தனி ஈழம் வேண்டும் என்ற கோரிக்கையினை முன்னிலைப் படுத்தியே விடுதலைப் புலிகள் அமைப்பின் பிரபாகரன் ஆயுத மேந்தி 30 வருட காலம் போராடினார். இறுதியில் போர் முடிவுக்கு கொண்டு வரப்பட்டு விடுதலைப் புலிகள் அமைப்பு இல்லா தொழிக்கப்பட்டது. பிரபாகரன் முன்வைத்த கோரிக்கைகளைக் காட்டிலும் பார தூரமான கோரிக்கைகளையே தற்போது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு உட்பட தமிழ்த் தேசியக் கட்சிகள் முன்வைத்துள்ளன.

நாட்டைப் பிளவுபடுத்தும் நிபந்தனைகளுக்கு எவ்வித மாற்றுக் கருத்துக்களும் இன்றி பொதுஜன பெரமுன மறுப்பு தெரிவித்துள்ளது. நாடு என்ற ரீதியில் தேசிய பாதுகாப்பு முக்கியத்துவப்படுத்தப்பட வேண்டும். நாட்டுக்குள் தீவிரவாதச் செயற்பாடுகள் மீண்டும் தலைதூக்குவதற்கு எத்தரப்பினரும் விரும்பம் கொள்வது கிடையாது.

கூட்டமைப்பு உட்பட தமிழ்த் தேசியக் கட்சிகள் முன்வைத்துள்ள 13 அம்சக் கோரிக்கை தொடர்பில் புதிய ஜனநாயக முன்னணியின் ஜனாதிபதி வேட்பாளர் சஜித் பிரேமதாஸ பகிரங்கப்படுத்த வேண்டும் – என்றார். (ஐ)

## பேஸ்புக்கின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

களும் கண்காணிக்கப்பட்டு வருகின்றன என முகநூல் சமூக ஊடகநிறுவனம் தெரிவித்துள்ளது.

முகநூல் நிறுவனத்தின் இலங்கைக்கான கொள்கைத் திட்ட முகாமையாளர் யசாஸ் அபேவிக்ரம, கொழும்பு ஊடகம் ஒன்றுக்கு அளித்துள்ள செவ்வியின் போதே இந்தத் தகவலை வெளியிட்டுள்ளார்.

முகநூல் நிறுவனம் முதல் முறையாக இலங்கையர் ஒருவரை, இந்தப் பதவிக்கு நியமித்துள்ளது.

இலங்கையில் ஜனாதிபதித் தேர்தல் காலங்களில் போலிச் செய்திகள், மற்றும் இனவாதக் கருத்துக்கள் சமூக ஊடகங்களின் மூலம் பரப்பப்படுவதாகக் குற்றச்சாட்டுகள் இருந்து வருகின்றன.

இந்த நிலையில், சமூக ஊடகங்களின் மூலம் போலிச் செய்திகள், இனவாதக் கருத்துக்கள் பரப்பப்படுவதைத் தடுப்பது குறித்து தேர்தல்கள் ஆணைக்குழு சமூக ஊடக நிறுவனங்களுடன் பேச்சுக்களை நடத்தியிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ஐ)

## கோழி இறைச்சி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கைச் செலவுக் குழு அனுமதி வழங்கியுள்ளது.

அத்துடன் செத்தல் மிளகாய் ஒரு கிலோவின் விலை 5 ரூபா வாலும் நெத்தலி ஒரு கிலோவின் விலை 25 ரூபாவாலும் குறைக்கப்பட்டுள்ளதாகவும் அந்தக் குழு அறிவித்துள்ளது. (ஐ)

# சஹ்ரானுக்கு உதவியோரே சஜித்தை ஆதரிக்கின்றனர்

## மஹிந்த ராஜபக்ஷ குற்றச்சாட்டு

தொடர் குண்டுத் தாக்குதலின் சூத்திரதாரியான சஹ்ரானுக்கு உதவிய அரசியல்வாதிகளே தற்போது சஜித்துக்கு ஆதரவு வழங்குகின்றனர் என எதிர்க்கட்சித் தலைவர் மஹிந்த ராஜபக்ஷ குற்றம் சுமத்தியுள்ளார்.

அங்குணுகொலபெலஸ்ஸவில் நடைபெற்ற தேர்தல் பிரசாரக் கூட்டத்தில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் இதனைக் குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

சுற்றுலாப் பயணிகள் நாட்டுக்கு வருவதில்லை. லட்சக்கணக்கானவர்களுக்குத் தொழில் இல்லை. இந்த நிலைமையை ஏற்படுத்தியவர்கள் யார்?

இவை அனைத்துக்கும் பொறுப்புச் சொல்ல வேண்டியவர்கள் யார்? சஹ்ரானா? அல்லது இந்த அரசா?

சஹ்ரானைக் கைது செய்யும்போது சஹ்ரானைக் காப்பாற்றியது இந்த அரசுதான். தற்போது இந்த அரசின் ஜனாதிபதி வேட்பாளருடன்தான் சஹ்ரான் ஆதரவாளர்கள் உள்ளனர் – என்றார். (ஐ)

## கூட்டமைப்பின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

திட்டவட்டமாக அறிவித்தார் எதிர்க்கட்சித் தலைவர் மஹிந்த ராஜபக்ஷ.

பெலியத்தையில் நடந்த கூட்டத்திலேயே அவர் நேற்று இந்த அறிவிப்பை விடுத்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில் –

ஈஸ்ரர்தினத் தாக்குதல் நடந்து இன்றுடன் (நேற்று) 6 மாதங்களாகி விட்டன. தேசிய பாதுகாப்பு குறித்து இந்த அரசுக்கு ஒரு தெளிவான கொள்கையில்லை. நாம் ஆட்சிக்கு வந்தால் பாதுகாப்பை உறுதிப்படுத்தும் செயற்திட்டங்களை வகுப்போம். உயிர்த்த ஞாயிறு தினத் தாக்குதல் நடந்தமைக்கு இந்த அரசே முழுப் பொறுப்பை ஏற்க வேண்டும். எல்லாத் தகவல்களும் இருந்தும் முறையான புலனாய்வுக் கட்டமைப்பும் பாதுகாப்பு ஏற்பாடுகளும் இல்லாத காரணத்தினால் அந்தத் தாக்குதலை நடத்தவிட்டு பார்த்துக் கொண்டிருந்தது அரசு. நாங்கள் நாட்டின் பொறுப்பை ஏற்றால் அந்தக் குறைபாடுகளை நிவர்த்தி செய்து பாதுகாப்பை உறுதிப்படுத்துவோம்.

ஐக்கிய தேசியக் கட்சி அரசு, அமைச்சரவை இதற்கான பொறுப்பை ஏற்கவேண்டும். ஏப்ரல் 5 ஆம் திகதி ஒரு அறிவிப்பு வந்தது. தாக்குதல்தாரிகளின் பெயர்கள், தாக்கப்படும் இடங்கள், தாக்கப்படும் நேரம் என்பன குறித்து அதில் சொல்லப்பட்டபோதும் உரிய நடவடிக்கைகளை எடுக்கவில்லை. முஸ்லிம் மக்களின் பிரதிநிதிகள் கூட இது குறித்து எச்சரித்திருந்தனர். ஆனால் அரசு எதனையும் கண்டுகொள்ளவில்லை. மதவழிபாட்டுத் தலங்களுக்குக் கூட செல்லமுடியாமல் போனது. இதனால்தான் நாங்கள் கோட்டாபயவை ஜனாதிபதியாக்கிப் பாதுகாப்பை உறுதிப்படுத்த கோருகின்றோம் – என்றார். (ஐ)

## தேர்தலை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தானித்து வருகிறது என்று, இந்தியாவின் 'எகொனமிக் ரைம்ஸ்' செய்தி வெளியிட்டுள்ளது.

இந்த தேர்தலில் சீன ஆதரவு கோட்டாபயராஜபக்ஷவுக்கு எதிராக, ஐ.தே.கவின் பிரதித் தலைவரும் வீடமைப்பு அமைச்சருமான சஜித் பிரேமதாஸ போட்டியிடுகிறார்.

அடுத்த மாதம் இந்தத் தேர்தலின் முடிவு இந்தியப் பெருங்கடலின் தென்பகுதியில் இந்தியாவின் பிரசன்னத்தின் போக்கை தீர்மானிப்பதாக இருக்கும்.

ஜனாதிபதித் தேர்தலில் பல வேட்பாளர்கள் போட்டியிட்டாலும், பிரதானமான போட்டி சஜித் பிரேமதாஸவுக்கும், முன்னாள் பாதுகாப்புச் செயலர் கோட்டாபய ராஜபக்ஷவுக்கும் இடையில் தான் இருக்கிறது.

கோட்டாபய சீன ஆதரவு பெற்ற முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் சகோதரர் ஆவார்.

இவர் உயர்மட்ட வேட்பாளராக இருக்கும் நிலையில், இரு பிரதான வேட்பாளர்களுக்கும் இடையில் சமமான போட்டி நிலவுகிறது.

சஜித் பிரேமதாஸ ஓர் எதிர்பாராத வெற்றியாளராக வரக்கூடும். அவர், ஆர்ப்பாட்டம் இல்லாதவராக இருப்பதுடன், எந்த சர்ச்சைகளிலும் சிக்கிக் கொள்ளாதவராக இருக்கிறார்.

நாட்டின் மொத்தச் சனத்தொகையில் கால்பங்கை கொண்ட சிறுபான்மையினர் மற்றும் கிராமப்புற மக்களின் செல்வாக்கை பெற்றிருக்கிறார்.

கடந்த ஆண்டு ஒக்ரோபர் மாதம் அரசியல் நெருக்கடியின் போது, ஜனாதிபதி சிறிசேனவுக்கும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுக்கும் இடையில், சுமுக நிலையை ஏற்படுத்துவதில் முக்கிய பங்காற்றியிருந்தார் என்றும் 'எகொனமிக் ரைம்ஸ்' செய்தி வெளியிட்டுள்ளது. (ஐ)

## சந்திரிக்காவுடன்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியைப் பாதுகாப்பதற்கு புதிய வேலைத் திட்டமொன்றை முன்னெடுக்கப்போவதாக நாடாளுமன்ற உறுப்பினர் குமார வெல்கம தெரிவித்துள்ளார்.

ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி – பொதுஜன பெரமுனவுடன் இணைந்துள்ளமை தொடர்பாக கருத்து தெரிவிக்கும்போதே அவர் இதனைக் குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியைப் பாதுகாப்பதற்கு எத்தகைய செயற்பாடுகளை முன்னெடுக்கவும் பின்னிற்கப்போவதில்லை.

அந்தவகையில் முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க வெளிநாட்டிலிருந்து நாடு திரும்பியதும் அது தொடர்பில் பேச்சு நடத்துவதற்குத் தீர்மானித்துள்ளேன்.

அதனைத் தொடர்ந்தே பாரிய வேலைத்திட்டத்தை முன்னெடுக்க தீர்மானித்துள்ளேன்.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியினர் பலர், தற்போது பொதுஜன பெரமுனவுடன் இணைந்து செயற்படுவதால் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் தலைமையையும் ராஜபக்ஷ குடும்பத்தினர் உரிமையாக்கிக் கொள்வதற்கு வாய்ப்புள்ளது.

எனவேதான் கட்சியைப் பாதுகாப்பதற்காகச் சந்திரிகாவுடன் இணைந்து செயற்படப் போகின்றேன் – என்றார். (ஐ)

## இந்தியத் துணை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

முன்வைக்கப்பட்ட சகல கோரிக்கைகளும் உதாசீனம் செய்யப்பட்டிருக்கும் நிலையில் நாளை புதன்கிழமை யாழ்ப்பாணத்தில் உள்ள இந்திய துணைத் தூதரகத்தை முற்றுகையிட்டுப் போராட்டம் நடத்துவதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

யாழ்.மாவட்டக் கடற்றொழிலாளர் சங்கங்களின் சம்மேளனத் தலைவர் வே.தவச்செல்வம் இதனைத் தெரிவித்தார்.

யாழ்.ஊடக அமையத்தில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும்போதே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

யாழ். மாவட்டத்தைச் சேர்ந்த 18 மீனவர்கள் வேண்டுமென்றே இந்தியக் கடற்படையினரால் கைது செய்யப்பட்டு இந்திய சிறைகளில் தடுத்துவைக்கப்பட்டிருக்கின்றனர். இவர்களைக் கடந்த 18ஆம் திகதி விடுவிப்பதாகக் கூறியபோதும் இப்போது மீண்டும் முதலாம் திகதி விடுவிப்பதாகக் கூறியிருக்கின்றனர்.

அவ்வாறு விடுவிக்கப்படும் மீனவர்களுடன் அவர்களுக்கு சொந்தமான படகுகளும் விடுவிக்கப்படவேண்டும். மீனவர்களின் விடுதலை தொடர்பாக இந்தியத் தூதரகம் மற்றும் பொறுப்புவாய்ந்த அமைச்சர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்கள் உள்ளிட்டோரின் கவனத்துக்குக் கொண்டு செல்லப்பட்டபோதும் எமது கோரிக்கைகள் உதாசீனம் செய்யப்பட்டிருக்கின்றன.

இந்நிலையில் நாளை புதன்கிழமை காலை யாழ்.மாவட்ட கடற்றொழிலாளர் சம்மேளனத்திலிருந்து தொடங்கும் மக்கள் போராட்டம் ஆளுநர் அலுவலகம் மற்றும் யாழ்.மாவட்ட செயலகம் ஆகியவற்றுக்குச் சென்று மகஜர்களைக் கையளிப்பதுடன் இந்தியத் துணைத் தூதரகத்தை முடக்கிப் போராட்டம் நடத்தப்படும்.

அன்றைய தினம் தூதரகத்தின் சகல செயற்பாடுகளும் முடங்கும் அளவுக்கு போராட்டம் நடத்தப்படும். இந்தியத் தூதரகம் மீனவர்கள் விடுதலை விடயத்தில் உடனடி நடவடிக்கை எடுக்கத் தவறினால் காலவரையறை அற்ற வகையில் இந்தியத் துணைத் தூதரகம் முற்றாக முடக்கப்படும் – என்றார். (ஐ–07)

## கட்சித்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பிரதமர் ரணிலுக்கு நெருக்கமான – தென்மாகாணத்தை பிரதிநிதித்துவப்படுத்தும் இந்த அமைச்சரைப் பெரமுனவுக்குள் உள்வாங்க எதிர்ப்பு தெரிவிக்கப்பட்டபோதும் அவற்றை சமாளிக்கும் முயற்சியில் மஹிந்த தரப்பு ஈடுபட்டு வருகிறது.

ஐக்கிய தேசியக் கட்சியின் அமைச்சர்களை உள்வாங்குவதால் அது அடுத்த நாடாளுமன்றத் தேர்தலில் தேவையற்ற சர்ச்சைகளை ஏற்படுத்துமென மஹிந்த தரப்பு எம்.பிக்கள் எதிர்ப்பு வெளியிடுகின்றனர் எனத் தெரிகிறது.

இதேவேளை, ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுனவின் சிரேஷ்ட உறுப்பினர் ஒருவர், ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியின் உறுப்பினர்கள் மூவரை தன்பக்கம் வளைத்துப் போட சஜித் தரப்பும் பேச்சுக்களை நடத்தியுள்ளது.

முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா ஊடாக இந்தப் பேச்சுக்கள் நடக்கின்றன. கடந்த சனிக்கிழமை நாடு திரும்பவிருந்த சந்திரிகா இவ்வார இறுதியில் நாடு திரும்பவுள்ளார். அதன் பின்னர் அவர் சஜித் தரப்புக்கு ஆதரவளிக்கும் அரசியல் பிரமுகர்களை ஒன்றிணைப்பாரெனக் கூறப்பட்டது. (ஐ)

## 5 தமிழ்க்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கொள்வதாக ஜே.வி.பி. தெரிவித்துள்ளது.

எனினும் வடக்கு – கிழக்கு இணைப்பு என்ற கோரிக்கையை மாத்திரம் ஏற்றுக்கொள்ள முடியாது என ஜே.வி.பியின் ஊடகப் பேச்சாளர் விஜித ஹேரத் குறிப்பிட்டார்.

ஜே.வி.பியின் கட்சித் தலைமை அலுவலகத்தில் நேற்று இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பிலேயே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

வடக்கு – கிழக்கின் தமிழ் தரப்பு 13 கோரிக்கைகளை ஜனாதிபதி வேட்பாளர்களிடம் முன்வைத்துள்ளனர். இதில் வடக்கு – கிழக்கை இணைக்கும் கோரிக்கைக்கு நாம் இணங்கவில்லை.

வடக்கு – கிழக்கு தமிழர் தாயகம். ஆகவே அதனை எமக்கு தாருங்கள் என்பதே அவர்களின் கோரிக்கையாக உள்ளது. கிழக்கில் முஸ்லிம் மக்கள் அதிகமாகவும் சிங்களவர்கள் ஓரளவும் வாழ்கின்றனர். திருகோணமலையை எடுத்துக்கொண்டாலும் யாழ்ப்பாணத்தை எடுத்துக்கொண்டாலும் அங்கு சிங்களவர்கள் வாழ்கின்றனர். ஆகவே அவர்களை நிராகரித்து வடக்கைத் தனி அலகாக அங்கீகரிக்க முடியாது.

எனினும் தமிழர் தரப்பு முன்வைத்த பல கோரிக்கைகள் நியாயமானவையாக உள்ளன. வடக்கின் தனியார் நிலங்களை மீண்டும் அவர்களுக்குக் கொடுக்க வேண்டும் என்பதில் மாற்றுக் கருத்துக்கு இடமில்லை. பயங்கரவாதத் தடைச்சட்டம் நீக்கப்பட வேண்டும் என்பதும் நியாயமாது. இப்போது இவ்வாறான மோசமான சட்டம் தேவையில்லை. அதேபோல் இப்போது கொண்டுவரும் சட்டமும் மோசமானது அதனை நாமும் எதிர்கின்றோம்.

மேலும் வடக்கு – கிழக்கு இளைஞர்களுக்கு வேலைவாய்ப்புக்களை உருவாக்க வேண்டும், அவர்களைப் பாதுகாக்க வேண்டும் என்பதில் மாற்றுக்கருத்து இல்லை. ஆகவே தமிழ் கட்சிகளின் 13 கோரிக்கைகளில் பிரதானகாரணிகளுடன் நாம் முரண்படவில்லை. ஆனால் வடக்கு – கிழக்கு இணைப்பு மாத்திரம் ஏற்றுக்கொள்ளக் கூடியதாக இல்லை – என்றார். (ஐ)

## இந்திய இரா...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

32ஆவது ஆண்டு நினைவுதினம் நேற்றுக் கடைப்பிடிக்கப்பட்டது.

யாழ். போதனா வைத்திய சாலை பணிப்பாளர் வைத்திய கலாநிதி த.சத்தியமூர்த்தி தலைமையில் நடைபெற்ற நினைவஞ்சலி நிகழ்வில் மருத்துவர்கள், மருத்துவ சேவையாளர்கள், வைத்தியசாலைப் பணியாளர்கள் மற்றும் பொதுமக்கள் அஞ்சலி செலுத்தினர்.

யாழ்.போதனா வைத்திய சாலைக்குள் 1987ஆம் ஆண்டு ஒக்ரோபர் 21ஆம் திகதி புகுந்த இந்தியப் படையினர் 68 அப்பாவிகளை சுட்டுப் படுகொலை செய்தனர்.

இரண்டு நாள்களாக வைத்தியசாலை ஆக்கிரமித்து வைத்திருந்த இந்தியப் படைகள், மூன்று மருத்துவர்கள், இரண்டு தாதியர்கள், மேற்பார்வையாளர் உள்ளிட்ட 21 மருத்துவ சேவையாளர்களையும், சிகிச்சை பெற்றுவந்த 47 நோயாளர்களையுமாக 68 பேரைக் கொன்று குவித்தமை குறிப்பிடத்தக்கது.

தமிழர் தாயகத்தில் இந்தியப் படைகள் அரங்கேற்றிய படுகொலைச் சம்பவங்களில் இதுவும் ஒன்றாகும். (ஐ–7)